2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 செப்டெம்பர் 1 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 206 | Thursday 01, September, 2022 | 16 பக்கங்கள் | 40/-

வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.
OOKLA® தடையற்ற தொடர் வெற்றியை கடந்த 3 வருடங்களாக SLT-MOBITEL பதிவு செய்துள்ளது!
SLTMOBITEL

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலை மாணவர்கள் கைது விவகாரம்:

## பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் மாணவர் எவருமே கைதாகவில்லை

சாதாரண சட்டத்தின் கீழேயே அவர்கள் மீது விசாரணை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சஜித்தின் கேள்விகளுக்கு பிரதமர் தினேஷ் பதில்



சட்டவிரோதமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பில் நாட்டில் நடைமுறையிலுள்ள சாதாரண சட்டத்துக்கு இணங்கவே நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் தடுத்து வைக்கப்பட மாட்டார்களென்றும் 06

2021 – 2022 பல்கலைக்கழக அனுமதி:

## விண்ணப்பங்கள் கோரல் செப்டம்பர் 05 முதல்



கல்வியாண்டு 2021– 2022க்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பங்களை கோரும் நடவடிக்கை செப்டெம்பர் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தகுதியான விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் 06

2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டம்:

## தீர்வு எதுவுமின்றி நகரும் நாட்டுக்கு சிறந்த பாதையை காட்டும் பட்ஜட்

**அருள் சத்தியநாதன்**

புத்திஜீவிகள், கல்விமான்கள், தொழிற்சங்கவாதிகள் பாராட்டு

நிதி அமைச்சராக ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த 2022 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத்திட்டம், தீர்வு எதுவுமின்றி நகரும் நாட்டுக்கு சிறந்த பாதையை காட்டுமென புத்திஜீவிகள், கல்விமான்கள்,தொழிற்சங்கவாதிகள் பலரும் பாராட்டியுள்ளனர்.

பெரும் பாதிப்புகளிலிருந்து சாதாரண மக்களைக் காக்கும் ஒரு முயற்சியென்றும் டொலர் போன்று ஒவ்வொருவரும் 05 கிலோ தங்கத்தை நாட்டுக்குள் கொண்டுவர அனுமதிக்க வேண்டுமென்றும் பெரும் பாதிப்புகளிலிருந்து சாதாரண மக்களைக் காக்கும் ஒரு முயற்சியென்றும் இந்த நிதியறிக்கை புதிய 06

# மரண தண்டனை நிறைவேற்ற கையெழுத்திடப் போவதில்லை

சட்ட மாஅதிபர் ஊடாக உயர்நீதிமன்றுக்கு ஜனாதிபதி அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால கொண்டுவந்த சட்டம் தொடர்பில் தனது நிலைப்பாட்டை அறிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



மரண தண்டனையை நிறைவேற்ற தான் கையொப்பமிடப் போவதில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (31) சட்ட மாஅதிபருடாக உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு குற்றவாளிகளுக்கு 2019 இல் மரண தண்டனையை நிறைவேற்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்திருந்தார்.

இந்தத் தீர்மானத்தை வலுவற்றதாக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரித்த போதே சட்ட மாஅதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் அறிவித்தார்.

விஜித் மலல்கொட, எல்.ரீ.பி. தெஹிதெனிய மற்றும் முருது பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மரண தண்டனையை மீள அமுல்படுத்துவது தொடர்பில் சட்ட மாஅதிபர் நேற்றுமுன்தினம் (30) ஜனாதிபதியின் நிலைப்பாட்டை வினவியபோது, மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு தனது கையொப்பத்தை, இனிமேல் பயன்படுத்தப் போவதில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும்போது, 06

## தாமரைக் கோபுர செயற்பாடு செப்டம்பர் 15 முதல் ஆரம்பம்

ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை தெரிவிப்பு



இலங்கை மக்களுக்கு புத்தம் புதிய அனுபவத்தை வழங்கும் வகையில் தெற்காசியாவின் மிக உயர்ந்த கட்டடமான "தாமரை கோபுரத்தின்" செயல்பாடுகளை செப்டம்பர் 15 முதல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் 113 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தாமரைக் கோபுரத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், பல புதிய அனுபவங்களை வழங்க கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட் 06

தேசிய ரீதியில் ஒன்றிணைந்து செயற்பட்டு

## பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலமாக தீர்வை காண்போம்!

தமிழ் டயஸ்போராக்களுக்கு நீதியமைச்சர் பகிரங்க அழைப்பு



தற்போதுள்ள பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண தேசிய ரீதியில் இணையுமாறு தமிழ் டயஸ் போராக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நாம் எடுக்கும் முயற்சி நேர்மையானது என்பதை காட்ட வேண்டும் என நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இன, மத, மற்றும் மொழி ரீதியாக 06

தொலைபேசி, கடிதங்கள், மின்னஞ்சல் தொடர்புகள்:

## பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு பணிப்பு

அரச அதிகாரிகளுக்கு அமைச்சு புதிய சுற்றறிக்கை

அரச நிறுவனங்களுக்கு பொது மக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கான பதில்களை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே மாயாதுன்னவின் கையொப்பத்துடன் இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 06

## எரிபொருள் பற்றாக்குறை நிலைமைக்கு தீர்வு

விநியோக நடவடிக்கை வழமைக்கு திரும்பியது



எரிபொருள் விநியோகத்தில் கடந்த ஓரிரு தினங்களில் நிலவிய சிக்கல் நிலைமை தீர்க்கப்பட்டு கடந்த 4 தினங்களாக போதுமானளவு எரிபொருள் விநியோகிக்கப்படுவதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். கடந்த ஒரு வாரமாக எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட சிக்கலால் மீண்டும் வாகனங்கள் நீண்ட வரிசைகளில் காத்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பல எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எரிபொருள் கிடைக்கப் பெறாமையால் 06

## 04 வெள்ளை முட்டைகள் 260 ரூபாவுக்கு விற்பனை

வர்த்தகருக்கு 05 இலட்சம் ரூபா அபராதம்



பலாங்கொடை நகரிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் முட்டைகளை நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்தமைக்காக 5 இலட்சம் ரூபா அபராதம் செலுத்துமாறு பலாங்கொடை பதில் நீதிவான் உத்தரவிட்டார். 4 வெள்ளை முட்டைகளை 260 ரூபாவுக்கு விற்பனை செய்தமைக்காகவே இந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு 06

## எதிரணியில் அமர்ந்த GL உள்ளிட்ட 13 SLPP எம்.பிக்கள்

அரசின் சிறந்த திட்டங்களுக்கு ஆதரவளிப்பார்களாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முன்னாள் வெளிவகார அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தலைமையில் பொதுஜன பெரமுனவின் 13 எம்பிக்கள் சுயாதீன குழுவாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் அமர்ந்து செயற்படுவதற்கு நேற்று தீர்மானித்துள்ளனர். பொது ஜன பெரமுனவின் தவிசாளரான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இந்த அறிவிப்பை சபையில் தெரிவித்தார். 06

## 20 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

வானிலை ஆய்வு நிலையம் அறிவிப்பு



கடும் பிரளயம் காரணமாக 20 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை (அதிக ஆபத்து) விடுக்கப்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு நிலையம் நேற்று தெரிவித்தது. இலங்கையை அண்மித்துள்ள குறைந்த வளிமண்டல குழப்பத்துடன் மேற்கு, தெற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 06

## தமிழகம் முழுவதும் இலங்கை தமிழருக்கு வீடு

அமைச்சர் மஸ்தான் உறுதியளிப்பு



தமிழகம் திண்டுக்கல்லில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமை மாதிரியாகக் கொண்டு, தமிழகம் முழுவதும் வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் அடுத்துள்ள தோட்டனூத்து ஊராட்சிப் பகுதியில், முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்காக 17.17 கோடி இந்திய ரூபா செலவில் 321 வீடுகளை நிர்மாணிக்கும் 06

உற்பத்தி, விற்பனை, களஞ்சியப்படுத்தல்:

**48 வகையான பொருட்கள் தொடர்பில் விசேட வர்த்தமானி** 03



**60 தங்க பிஸ்கட்டுகளுடன் ஜா- எல பகுதியில் ஒருவர் கைது**

157 மில்.ரூபா பெறுமதியென மதிப்பீடு 03

அனுமதியின்றி பேரணி நடத்திய குற்றச்சாட்டு

**பல்கலை ஒன்றிய மாணவர்கள் 28 பேர் பிணையில் விடுதலை!** 03

## 10 kg ஐஸ் போதைப்பொருளுடன் மன்னாரில் இருவர் கைது

பயணித்த கெப் ரக வாகனமும் பறிமுதல்



மன்னாரில் 10.4 கிலோ ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப் பட்டுள்ளதுடன் கெப் கை வாகனத்துடன் 02 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று (31) அதிகாலை மன்னார் வீதிச் சோதனைச் சாவடிக்கருகில் வைத்து 54 ஆவது பிரிவு மற்றும் 11ஆவது இலங்கை எறிகணை படையினர், அவர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். 06

## பெருந்தொகை பணத்தை வைப்பிலிட்ட பெண் கைது

கிராண்ட்பாஸ் பகுதியில் CIDயால் கைது



கொழும்பு வங்கி ஒன்றில் சுமார் 2 கோடி ரூபாய் பணத்தை வைப்புச் செய்ததுடன், வங்கி பாதுகாப்பு பெட்டகத்தில் நகைகளை வைத்த பெண் ஒருவர் குற்றப் புலனாய்வு பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ கூறியுள்ளார்.

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த பெண்ணே சட்டவிரோத சொத்துச் சேர்ப்பு சந்தேகத்தில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். 06

## நீர்கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் துப்பாக்கிச்சூடு

காயமடைந்த இருவர் வைத்தியசாலையில்!



நீர்கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கி பிரயோகம் நேற்று முற்பகல் நடத்தப்பட்டுள்ளதாகவும், காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## கோழி பிரியாணியில் கரப்பான் பூச்சி பொரியல்

உணவக உரிமையாளருக்கு பிணை

**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

08 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக நீதிமன்று உத்தரவு

கரப்பான் பூச்சியுடன் கோழி பிரியாணி வழங்கிய மட்டக்களப்பு நகர் பிரதேசத்திலுள்ள உணவகமொன்றின் உரிமையாளாரை எதிர்வரும் 08 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டதுடன் அவரை 25,000 ரூபா சரீரப் பிணையில் 06

21,000 அமெ.டொலர் பெறுமதி;

## உலர் உணவுப்பொருட்கள் பங்களாதேஷிடமிருந்து



இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக 21,000 அமெரிக்க டொலர் பெறுமதியான உலர் உணவுகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பவற்றை பங்களாதேஷ் மக்கள் வழங்கியுள்ளனர்.

முதற்கட்டமாக 120 குடும்பங்களுக்கு இந்த உலர் உணவு விநியோகிக்கப்பட்டதுடன் மேலும் பல கட்டங்களாக இது நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கொழும்பு இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் குழுக்களுக்கு இடையிலான சமர்




கொழும்பு இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் குழுக்களுக்கு இடையிலான 2022 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட போட்டிகள் கல்லூரியின் உதைபந்தாட்ட அபிவிருத்திக் குழுவினால் (OBA) ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 28 ஆம் திகதி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

20 அணிகள் கொண்ட போட்டி ஒரு குழு நிலையுடன் தொடங்கியது, பின்னர் Cup, Plate மற்றும் Bowl championships என நொக் அவுட் கட்டத்திற்கு முன்னேறியது.

Bowl பிரிவில் 2006 ஆம் ஆண்டின் பழைய மாணவர் குழு இரண்டாம் இடத்தைப் பிடித்ததுடன் 2007 ஆம் ஆண்டின் குழு வெற்றியாளர்களாக தெரிவாகியது.

கல்லூரியின் தற்போதைய 19 வயதுக்குட்பட்ட அணியும் போட்டியில் பங்கேற்றதுடன் பிளேட் சாம்பியன்ஷிப்பில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. இறுதிப் போட்டியில் 2013 இன் வெற்றியாளர் குழுவிடம் தோல்வியடைந்தது.

சமமாக போட்டியிட்ட cup சாம்பியன்ஷிப்பில், 2014 இன் பேட்ச் 1998 ஆம் ஆண்டின் மூத்த வீரர்களை வீழ்த்தி சாம்பியன்களாக முடிசூட்டப்பட்டது.

இந்துக் கல்லூரியின் முன்னாள் மற்றும் வெற்றிகரமான உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளரான அர்ணாசலம் சின்னத்தம்பி பிரதம அதிதியாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தமிழ்ப் பிரிவு பிரதிப் பணிப்பாளரான கிருஷ்ணசாமி ஹரேந்திரன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.
















## விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டிருந்த பாரிய எண்ணெய் தாங்கி மீட்பு



(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரம் பகுதியிலுள்ள தனியார் காணியொன்றில் விடுதலைப்புலிகளால் நிலத்தில் புதைக்கப்பட்டுள்ள பாரிய எரிபொருள் தாங்கியொன்று நேற்று நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மீட்கப்பட்டுள்ளது.

காணியில் நிலத்தில் எரிபொருள் நிரப்பிய தாங்கியிருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவின் நீதிமன்ற அனுமதியுடன் தோண்டும் நடவடிக்கைகள் நேற்று காலை முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் கிராமசேவையாளர், பொலிஸார்,இராணுவத்தினர் முன்னிலையில் கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்டது.

இதன்போது பாரிய இரும்பு எரிபொருள் தாங்கி ஒன்று எரிபொருட்கள் இல்லாத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தாங்கி புதைக்கப்பட்டுள்ள இடத்தில் மூன்று இடங்களில் தோண்டப்பட்டு எரிபொருள் தாங்கியில் இரண்டு இடங்களில் வெட்டப்பட்டுள்ள நிலையில் காணப்பட்டுள்ளது.

16.3 அடிநீளமும்,7.9அடி விட்டமும் கொண்ட எரிபொருள் தாங்கி மீட்கப்பட்டுள்ளது. இதில் மண்ணெண்ணெய் சேமித்து வைத்திருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட எரிபொருள் தாங்கியினை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கொண்டு சென்று பாதுகாக்குமாறும் இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிபதி பணித்துள்ளார்.

## குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை பூர்த்தி செய்யும் அருட்தந்தை இராயப்பு புஸ்பராஜ்





(தலைமன்னார் விஷேட நிருபர்)

குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்த மன்னார் மறைமாவட்டத்தின் புனித செபஸ்தியார் பேராலயத்தின் பரிபாலகர் அருட்பணி இராயப்பு புஸ்பராஜ் அடிகளார் தனது குருத்துவ வாழ்வின் யூபிலி நன்றித் திருப்பலியை மருதமடு ஆலயத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை ஒப்புக்கொடுத்தார்.

நன்றி திருப்பலியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை , மட்டக்களப்பு திருமலை மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயரும் முன்னாள் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க ஆயருமான கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை மன்னார் மற்றும் வெளி மறைமாவட்டங்களிலிருந்து வருகை தந்திருந்த அதிகமான குருக்கள், அருட்சகோதரிகள் அருட்சகோதரர்கள் அவரின் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வடக்கின் உதயம்

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் 8.5 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளுடன் நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். நயினாதீவு பகுதியை சேர்ந்த 38 வயதுடைய நபரொருவர் யாழ்.நகர் மத்தி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் அவர் நயினாதீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கஞ்சா போதைப்பொருளை எடுத்து வந்து கொழும்புக்கு கடந்தவிருந்ததாக தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கடத்தப்பட்டதாக கூறப்பட்ட யுவதி காதலனுடன் திருமலையில் கைது

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு குமுழமுனை பிரதேசத்தில் யுவதி ஒருவர் காரில் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரில் வந்த இளைஞர் கும்பலொன்று யுவதியினை கடத்தி சென்றுள்ளமை தெரியவந்துள்ளதை தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் முதற்கட்டமாக கடத்தலுக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த மூன்று இளைஞர்களை கைதுசெய்துள்ளனர். இதனைதொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கடத்தப்பட்ட யுவதி தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

யுவதி காதலித்த இளைஞனுடன் ஒன்றாக இருக்கின்ற ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இளைஞனும் யுவதியும் திருகோணமலையில் விடுதியொன்றில் தங்கியிருந்த போது கடந்த 27.08.2022 அன்று அவர்கள் இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை இளைஞனின் தாய்,சகோதரியையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கடத்தலுக்கு உதவிய குற்றச்சாட்டு மற்றும் கடத்தல் சம்பவத்திற்கு உதவியவர்கள் என மொத்தமாக 6 பேர் கைதுசெய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 01.09.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

யுவதி மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இளைஞனின் தாயாரின் வற்புறுத்தலினாலேயே இளைஞனுடன் திருகோணமலை சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது. திருகோணமலையில் இளைஞனின் அக்கா விடுதியொன்றில் இருவரும் தங்குவதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளார். இதன்போதே இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## குப்பைக் கூளங்களினால் வாய்க்கால்களில் அடைப்பு

### மக்களின் பொறுப்பற்ற செயல்களினால் வெள்ள அனர்த்தம்





யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் பெய்த கடும் மழை காரணமாக யாழ்.மத்திய பஸ் நிலைய பகுதிகளில் சூழ்ந்திருந்த வெள்ளத்தினை யாழ்.மாநகர ஊழியர்கள் பெரும் சிரமத்திற்கு மத்தியில் வெளியேற்றினர். யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் திடீரென கடும் மழை பொழிந்தது. அதனால் யாழ்.மத்திய பஸ் நிலையம் மற்றும் அதனை சூழவுள்ள கடைத்தொகுதிகள் உள்ளிட்ட இடங்களில் வெள்ளம் தேங்கி நின்றன.

அந்நிலையில் மாலை யாழ்.மாநகர சபை ஊழியர்கள் வெள்ளத்தை கடும் சிரமத்தின் மத்தியில் வெளியேற்றினர். வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால் பகுதிக்குள் பெருமளவான கழிவு பொருட்களை பொறுப்பற்றதனமாக பலர் வீசி சென்றமையால் வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால் பகுதிகள் கழிவு பொருட்களால் நிரம்பி காணப்பட்டமையால் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலைமை காணப்பட்டது.

கழிவு பொருட்களை மாநகர சபை ஊழியர்கள் அகற்றி வெள்ளவாய்க்காலை சிரமங்களுடன் துப்பரவு செய்தமையால் வெள்ளம் சில நிமிடங்களில் வழிந்தோடியுள்ளது .

இப்பணியில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபனும் மாநகர ஊழியர்களுடன் இணைந்திருந்தார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 1 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
01ஆம் திகதி
சுபஹ் - 04.47
லுஹர் - 12.12
அஸர் - 03.16
மஃரிப் - 06.18
இஷா - 07.29

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆவணி 16
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: அமிர்தசித்த யோகம்
திதி: சஷ்டி



## பல்கலை ஒன்றிய மாணவர்கள் 28 பேர் பிணையில் விடுதலை

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அனைத்து பல்கலைக்கழக ஒன்றிய மாணவர்கள் 28 பேர் நேற்று (31) கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் அனுமதியின்றி பேரணியை நடத்திய குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் நேற்றுமுன்தினம் (30) கைது செய்யப்பட்டனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியை கலைப்பதற்கு பொலிஸாரினால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகை

06

உற்பத்தி, விற்பனை, களஞ்சியப்படுத்தல்:

## 48 வகையான பொருட்கள் தொடர்பில் விசேட வர்த்தமானி

### பாவனையாளர் அதிகாரசபை அதிரடி



பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, 48 வகையான பொருட்களின் உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை தொடர்பில் பல நிபந்தனைகளை விதித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளது.

உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் என்று அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் அல்லது எந்தவொரு நபரும் கோரும் பொருட்கள் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும் என இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மூலப்பொருட்களின் சிக்கல் அல்லது பிற நியாயமான உற்பத்தி சிக்கல்கள் இல்லாவிட்டால், பொருட்களின் உற்பத்தியாளர்கள் அதிகபட்ச உற்பத்தி திறனை பராமரிக்க வேண்டும்.

அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் பற்றுச்சீட்டை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதுடன், பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விற்பனையாளரிடம் வைத்திருக்க வேண்டும் எனவும் நுகர்வோர் அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்துக்கு நேற்றுக் காலை விஜயம் செய்தார். முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எம்.பியும் இதன்போது வருகை தந்திருந்தார்.

## ஹற்றன் நகர சபை விரைவில் மாநகர சபையாக மாற்றமடையும்

### பிரதமர் உறுதியளித்ததாக ஜீவன் சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஹற்றன் நகர சபையை விரைவில் மாநகர சபையாக தரமுயர்த்ததுவதற்கு பிரதமரும் பொது நிர்வாக,மாகாண சபைகள்,உள்ளூராட்சி சபை அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன இணக்கம் தெரிவித்துள்ளதாக இ.தொ. கா பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதே வேளை மலையக பிரதேசங்களில் இயங்கும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களை பிரதேச சபைகளாக தரமுயர்த்தவும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக ஜீவன் தொண்டமான் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இடைக்கால வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் தற்போதைய சூழ்நிலைக்கு பொருந்தும் வகையில் ஜனாதிபதியினால் இடைக்கால வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசிறை கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய அடிப்படை மாற்றங்கள் குறித்து வரவு செலவு திட்டத்தில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

06

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை:

## அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க விமானப் படை தயார் நிலையில்

### விமானப் படைத் தளபதி தெரிவிப்பு

**ஸாதிக் ஷிஹான்**

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்படக்கூடிய எந்தவொரு அனர்த்தங்களுக்கும் முகம் கொடுக்கும் வகையிலும் பாதிக்கப்படும் மக்களை பாதுகாப்பாக மீட்டெடுக்கும் மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலும் இலங்கை விமானப் படை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன தெரிவித்துள்ளார்.

இலங்கை விமானப் படையின் விமானங்கள்

06




## கம்பஹா மாவட்ட தமிழ் தின போட்டி

### கல்லொழுவை அல் அமானில் நாளை நடைபெறும்

கம்பஹா மாவட்டத்தை சேர்ந்த மினுவாங்கொடை, நீர்கொழும்பு, கம்பஹா, களனி ஆகிய நான்கு கல்வி வளையங்களில் தமிழ் மொழி மூலம் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழி தின போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

மினுவாங்கொடை கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நாளை காலை 9 மணி முதல் நடைபெறும் இப்போட்டிகளின் ஆரம்ப அமர்வில் தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.

வைபவத்தில் சிறப்பு அதிதியாக மூத்த ஊடகவியலாளரும் எழுத்தாளருமான கலாபூசணம் எம்.ஏ.எம். நிலாம் பங்கேற்று சிறப்பிக்க உள்ளதாக மினுவாங்கொடை கல்வி வலய தமிழ் மொழி மூல பிரிவு பணிப்பாளர் ரிஸ்வி அமீர் அலி தெரிவித்தார்.

கோதுமை மா 330 ஆக அதிகரிப்பு:

## தோட்ட தொழிலாளர் சம்பளம் ரூ.2000 ஆக அதிகரிக்க வேண்டும்

### சபையில் வீ. இராதாகிருஷ்ணன் எம்பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யும் திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்துள்ளதுடன் பெருந்தோட்டத் துறை மற்றும் மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் பிரதான உணவு கோதுமை மா என்பதால் அதன் விலை 300 ரூபாவை விட அதிகரித்துள்ளதால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 2,000 ரூபாயாகவாவது அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஏற்றுமதி மூலப் பொருட்களுக்கான நெருக்கடி காரணத்தால் பல்வேறு துறைகள் வீழ்ச்சியடைந்து சுமார் 10,000 இளைஞர்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், அந்த துறைகளுக்கான மூலப் பொருட்களை

06

## பயங்கரவாத தடை சட்டத்தை மறுபரிசீலனை செய்வது அவசியம்

### ரவூப் ஹக்கீம் எம்பி சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான தீர்மானங்களை மீளாய்வுக்கு உட்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தடைப்பட்டியலில் அதிகமான அப்பாவி மாணவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர் அதுதொடர்பில் அரசாங்கம் மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இடைக்கால வரவு செலவுத் திட்டம் மீதான முதலாவது நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பயங்கரவாத தடைச் சட்டத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தி தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது நாட்டில் சட்டம் ஒழுங்கை ஏற்படுத்தும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு பாரிய சவாலாக அமையும் என்பதை அவர்

06

## ஆதி ஸ்ரீ ஐயப்ப ஷேத்ர ஆவணி ஓணம் திருவிழா

கொழும்பு 13, ஹின்னிஹப்பு ஹாமி மாவத்தை, இல,67/A அமைந்துள்ள ஆதி ஸ்ரீ ஐயப்ப ஷேத்ர ஆவணி ஓணம் திருவிழா பத்து நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 30ம் திகதி ஆரம்பமான இத்திருவிழா எதிர்வரும் 08ம் திகதி வரை தினசரி மாலை 6.15 பூஜைகள் நடைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு ஆலய அறங்காவலர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

## முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாந்து புள்ளே கொலை வழக்கு; இறுதித் தீர்ப்பு இன்று

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாந்து புள்ளே மற்றும் பலர் தற்கொலை குண்டுதாரியால் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கம்பஹா முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்கு தீர்ப்பு இன்று (01) உயர் நீதிமன்ற நீதிபதி சஹன் மாபா பண்டாரவால் வழங்கப்படவுள்ளது.

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் வெலிவேரிய காந்தி விளையாட்டு மைதானத்துக்கு அருகில் தற்கொலை குண்டுதாரியால் முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாந்துபுள்ளே உள்ளிட்ட 16 பேரை கொலை செய்தது, மற்றும் 84 நபர்களை கொலை செய்ய முயற்சி செய்தமை, அந்த கொலை முயற்சிக்கான சதியில் ஈடுபட்டது உள்ளிட்ட 31 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபரால் முன்னாள் புலி உறுப்பினரான செல்வராஜ் கிருபாகரன் எனப்படும் மொரிஸ், கம்பஹாவின் முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் செனரத் லக்ஷ்மன் குரே,

06

## 60 தங்க பிஸ்கட்டுகளுடன் ஜா- எல பகுதியில் ஒருவர் கைது

### 157 மில்.ரூபா பெறுமதியென மதிப்பீடு



ஜா எல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவர் 60 தங்க பிஸ்கட்டுகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட விமான நிலைய வரியில்லா வர்த்தக வளாகத்தின் ஊழியர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 157 மில்லியன் பெறுமதியும் 6.995 கிலோ எடை கொண்ட தங்க பிஸ்கட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த தங்க பிஸ்கட்களை தலா பத்து பார்சல்களில் தயார் செய்து இடுப்பில் கட்டியிருந்த அந்நபர் இரவு 7.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள்

06



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மிஹிந்துபுர தொடர்மாடி வீடமைப்புத் தொகுதி நிர்மாண நடவடிக்கைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்திய நிறுவனமான சீ.டீ.சீ. இன்டஸ்ரியல் இன்பிராஸ் லிமிடட் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுக்கு இடையே அண்மையில் கைச்சாத்தானது. இந்நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ரஜீவ் சூரிய ஆரச்சி, உப தலைவர் பீ.ஜீ. லக்ஷ்மன் குணவர்தன, பொதுமுகாமையாளர் பொறியியலாளர் கே. ஏ. ஜானக்க மற்றும் சீ.டீ.சீ. இன்டஸ்ரியல் இன்பிராஸ் லிமிடட் நிறுவன நிதிப்பிரிவின் உதவிப் பொதுமுகாமையாளர் என். ஸ்ரீ நிவாச ராஓ ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தனியார் முதலீட்டாளர்களின் உதவியுடன் வடகடல் நிறுவனத்தை செயற்படுத்த திட்டம்

### ஊழியர்களை பங்குதாரர்களாக்குவதாகவும் அமைச்சர் டக்ளஸ் உறுதி

வடகடல் நிறுவனத்தின் வலை உற்பத்தி தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்றவர்களை, பங்குதாரர்களாக உள்ளடக்கி, தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் வலைத் தொழிற்சாலைகளை செயற்படுத்த எதிர்பார்ப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

லுணுவில தொழிற்சாலையை சேர்ந்த பணியாளர்களின் பிரதிநிதிகளை நேற்று(31) சந்தித்துக் கலந்துரையாடிய போது, மேற்கண்டவாறு தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், தற்காலிகமாக 5 பணியாளர்களைக் கொண்ட குழுவொன்றுக்கான விபரங்களை தருமாறும், அதனூடாக தொழிற்சாலை

06



## பழைய மாணவர் சங்க பொதுக்குழு கூட்டம்

கொழும்பு 13 கொட்ஞாசேனை மத்திய கொழும்பு இந்து மகா வித்தியாலத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்குழு கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (04) காலை 11 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது. பாடசாலை பழைய மாணவர்கள் தவறாது வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 244.50 | 256.43 |
| கனடியன் டொலர் | 272.16 | 285.15 |
| யூரோ | 353.45 | 368.56 |
| ஜப்பான் யென் | 2.5937 | 2.6993 |
| சிங்கப்பூர் டொலர் | 254.19 | 265.21 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 418.55 | 435.71 |
| சுவிஸ் பிராங்க் | 368.26 | 385.71 |
| அமெரிக்க டொலர் | 357.40 | 368.71 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 957.52 |
| குவைத் டினார் | 1,173.60 |
| ஓமான் ரியால் | 937.65 |
| கட்டார் ரியால் | 98.22 |
| சவூதி ரியால் | 96.12 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.28 |

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 16ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 04

## குறள் தரும் சிந்தனை



இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்

*சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள் அவையின் நேரத்தையும், நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.*

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வெளிப்படைத்தன்மையான முயற்சிகள்

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள தற்போதைய சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து தயாரித்துள்ள இடைக்கால வரவு செலவுத்திட்டதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற வகையில் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

தற்போதைய சூழலில் மக்களுக்கு நிவாரணங்கள் அளிக்கக்கூடிய இவ்வாறான ஒரு வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்து சமர்ப்பிப்பது என்பது இமாலயச் சாதனை. அதுவே பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உளளது.

அந்த வகையில் இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை நாட்டில் எல்லா மட்டத்தினரும் பாராட்டி வரவேற்றுள்ளனர். நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதை இவ்வரவுசெலவுத் திட்டம் இலக்காகக் கொண்டமைந்துள்ளது. இது வெளிப்படையானது. இவ்வரவுசெலவுத் திட்டம் நடைமுறைக்கு வரும்போது நாட்டில் புதிய மறுமலர்ச்சி ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

அதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்றது முதல் இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் முன்னெடுத்து வருகின்றார். அவற்றில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்தச் சூழலில் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வரவு செலவுத்திட்டம் மீதான உரையின் போது ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

'தனிப்பட்ட அரசியல் இலக்குகளை புறந்தள்ளிவிட்டு நாட்டையும் தேசத்தையும் மீளக்கட்டியெழுப்புகின்ற பணியில் இச்சபையில் உள்ள உங்கள் அனைவரையும் இந்நாட்டின் அனைத்து பிரஜைகளையும் ஒன்றிணையுமாறு கோரிக்கை விடுக்கின்றேன். நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் எமது தாய்நாட்டை உயர்வடையச் செய்ய முடியும். மாறி வருகின்ற உலகுடன் சரிசமமாக நின்று போட்டியிட்டு வெற்றியடையும் தேசமொன்றை உருவாக்குவதற்கு எம்மால் முடியும். இச்சந்தர்ப்பத்தை நாம் தவற விடுவோமாயின் உலகின் விழிம்பு நிலைக்கு தள்ளப்பட்டு விடுவோம்'.

அது தான் உண்மை. தனிப்பட்ட அரசியல் நலன்களுக்கு அப்பால் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டிய காலமிது. அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் மறுமலர்ச்சியையும் சுபீட்சத்தையும் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கும். தவறும் பட்சத்தில் நாடு உலகின் விழிம்பு நிலைக்கு தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாது. அவ்வாறானதொரு துரதிர்ஷ்டமான நிலைக்கு நாடு தள்ளப்பட்டு விடக்கூடாது. அதுவே நாட்டை உண்மையாகவே நேசிக்கும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.

இந்த நிலையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்து இருக்கின்றார். அதன் நிமித்தம் கட்சிகளுக்கு தொடர்ந்தும் அழைப்பு விடுத்து வருகின்றார்.

இப்பின்னணியில் சில அரசியல் கட்சிகள், அரசாங்கத்தின் குறித்த செயற்பாடுகளால் நாம் சர்வ கட்சி அரசாங்கத்தில் இணைய மாட்டோம் எனக் குறிப்பிடுகின்றன. இன்னும் சில கட்சிகள், சில கொள்கைகள் காரணமாக சர்வகட்சி அரசில் இணைய முடியாதெனக் கூறவும் செய்கின்றன.

இந்த நிலையில் இக்கட்சிகளுக்கும் தெளிவாக பதிலளித்துள்ள ஜனாதிபதி, சர்வகட்சி அரசில் இணைந்து கொள்ளுமாறு இவ்வரவு செலவுத்திட்ட உரையின் ஊடாக அழைப்பு விடுக்கவும் தவறவில்லை.

'சர்வகட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் அல்லது கொள்கைகளை தீர்மானிப்பது நான் அல்ல. இது ஒரு தனி மனிதனால் அல்லது தனிக் கட்சியொன்றினால் நிர்வகிக்கப்படவும் மாட்டாது. அரசாங்கத்தின் அனைத்து பங்காளர்களதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில்தான் இது உருவாக்கப்படும். அதனால் நீங்கள் ஏற்றுக்கொள்ளாத கொள்கைகள் அல்லது நடைமுறைகள் காணப்படுமாயின் அவற்றை சர்வகட்சி அரசாங்கத்திற்குள் மாற்றியமைப்பதற்கான அதிகாரமும் உரிமையும் உங்களுக்கு உள்ளது என்பதையும் வலியுறுத்திக் குறிப்பிட்டிருக்கின்றார் ஜனாதிபதி.

இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கான முயற்சிகளை அவர் எவ்வளவு தூரம் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கின்றார் என்பதற்கு இது தெளிவான சான்றாக உள்ளது.

ஆகவே தற்போதைய சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டும். அதுவே உடனடித் தேவை. அதனை உணர்ந்து கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் ஒன்றிணைந்து செயற்படுவது இன்றியமையாதது. அது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# அனைத்து வசதிவாய்ப்புகளையும் கொண்டுள்ள மாணவர்களின் பரீட்சை வெற்றி சாதனையல்ல!

தனது இரண்டு கைகளையும், ஒரு காலையும் இழந்த மாணவி ஒருவர் 2021 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் தோற்றி மூன்று A சித்திகளைப் பெற்றிருந்தார். ரஷ்மி நிமேஷா குணவர்த்தன என்ற மாணவியே இவ்வாறானதொரு சாதனையை படைத்துள்ளார்.

எஹெலியகொட தேசிய பாடசாலையில் கல்வி பயின்ற ரஷ்மி நிமேஷா தனது இடது காலால் பரீட்சை வினாத்தாள்களுக்கு விடை எழுதி இந்தத் திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

கடினமான சவால்களுக்கு மத்தியில் இந்த வெற்றியை அவர் எட்டியுள்ளார். உடல் குறைபாடு என்பது வெற்றிக்கான தடையல்ல என்று நிரூபித்துள்ளார் அம்மாணவி.

"அனைத்து வசதி வாய்ப்புகளும் கிடைக்கும் மாணவர்கள் பரீட்சையில் வெற்றி பெறுவது சாதனையல்ல. ஆனால் வறுமை, குடும்பத் துன்பங்கள் மற்றும் உடல் அங்கக் குறைபாடு ஆகியன கொண்ட மாணவர்கள் சவால்களைத் தாண்டி பரீட்சையில் வெற்றி பெறுவதுதான் சாதனை" என்று இம்மாணவியின் பரீட்சைப் பெறுபேற்றை அறிந்த கல்வியியலாளர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

"வேதனைகளை தாண்டி, தடைகளைத் தாண்டி, இயலாமைகளைத் தாண்டி வெற்றியீட்ட வேண்டும். பயத்தை ஆராதித்தால் அது எமது பயத்தினை தாண்டி பயணிக்க அனுமதிக்காது. பயத்தைப் பார்த்து எதிர்த்து நாம் கேள்வி கேட்க வேண்டும்" என்பதே வெற்றி வாசகம் ஆகும்.

மாணவி ரஷ்மி நிமேஷாவினால் எல்லாப் பிள்ளைகளையும் போன்று ஒடியாடி விளையாட முடியவில்லை. ஏனென்றால், அவளுக்கு இரண்டு கைகளும் ஒரு காலும் இல்லை.ஆனாலும் அவள் துவண்டு போகவில்லை. தனது இயலாமையை எண்ணி மனம் இடிந்து போகவில்லை. விதியை நொந்து சரிந்து போகவில்லை.

இரு கைகள் இல்லாவிட்டாலும், தனது இடது காலைப் பயன்படுத்தி உயர்தர பரீட்சை எழுதி 3 A சித்திகளை பெற்று அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளார் இம்மாணவி. அனைத்து ஊடகங்களும் ரஷ்மி நிமேஷா குணவர்த்தனவின் வாசற்படியில் அவரின் பேட்டிக்காக காத்திருந்தன.

2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி பிறந்த ரஷ்மி நிமேஷா





தெல்லோய பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். 2012 ஆம் ஆண்டு 5 ஆம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் எஹேலியகொட தேசிய பாடசாலையில் மேலதிக கற்கை நெறியைத் தொடர்ந்தார்.

2016 ஆம் ஆண்டு நடந்த சாதாரண தர பரீட்சையில் 8A சித்திகளையும் 1 B சித்தியையும் பெற்றார். தற்போது க.பொ.த உயர் தர பரீட்சையில் வர்த்தக பிரிவில் 3 A சித்திகளைப் பெற்றுள்ளார்.

அதேவேளை இம்மாணவி 2017 ஆம் ஆண்டு வியட்நாமில் நடைபெற்ற Global IT challenge 2017 super challenge போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

தனது மகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ரஷ்மி நிமேஷாவின் தந்தை சரத் குணவர்த்தன "எனது மகளுக்கு உடல் குறைபாடுகள் இருந்த போதிலும், அனுதாபத்தை எதிர்பார்க்காமல் தனது திறமையால் வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கு மகளுக்கு தொடர்ந்து வழி காட்டினேன்" என்று தெரிவித்துள்ளார்.

"தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் எனது இலக்கை நோக்கி நகர்ந்தேன். என்னால் முடியுமென்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் சாத்தியமில்லாத எந்த விடயங்களுமில்லை" என தனக்குள் ஒளிர்ந்து கொண்டிருக்கும் பிரகாசமான தன்னம்பிக்கையுடன் தெரிவிக்கிறார் ரஷ்மி நிமேஷா. இம்மாணவி தன்னம்பிக்கையின் ஒளிச்சுடர். சாதிக்க நினைப்பவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கம்.

**வறுமை, உடல் அங்கக் குறைபாடு, குடும்பத் துன்பங்களை முறியடித்து பரீட்சையில் பெருவெற்றியடைபவர்களே உண்மையான சாதனையாளர்கள்!**

வாழ்வில் சாதிப்பதற்கு எதுவுமே தடையல்ல. வலிகள் உருவாகித்தான் புதிய வழிகள் பிறக்கின்றன. பூமியில் பாதை இல்லாவிட்டால் ஆகாயத்தில் நடந்து செல்ல முயற்சிக்க வேண்டும். பாதை இல்லையென்று இடிந்து போய் இருந்து விடாதே! நீ நடந்து சென்றால் அதுவே புதிய பாதை!

இவ்வாறு அந்நாளில் அறிஞர்கள் கூறியதுதான் இம்மாணவியை நினைக்கையில் ஞாபகத்துக்கு வருகின்றது.



**சோதனைகளை சாதனையாக மாற்றிய, இருகைகளும் இல்லாத மாற்றுத் திறனாளி மாணவி ரஷ்மி நிமேஷா குணவர்த்தன மனம் திறக்கிறார்**



இர்ஷாத் இமாமுதீன்...
(கிண்ணியா தினகரன் நிருபர்)

# காரைதீவில் சாதனை மாணவர்களை நேரில் சென்று வாழ்த்திய தவிசாளர்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்த காரைதீவு மண்ணில், இம்முறை க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களை காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் வீடுதேடிச் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்தார் .

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி வரலாற்றில் அதிகூடிய எண்ணிக்கையில் நான்கு மாணவர்கள் மருத்துவத் துறைக்கும், ஒரு மாணவி பொறியியல் துறைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.இது விபுலானந்தாவில் வரலாற்று சாதனையாகும்.

இவ்வரலாற்று சாதனையை நிகழ்த்திய மாணவர்கள் மற்றும் அவர்களது அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருக்கு அவர் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மாணவிகளான லோகநாதன் புவித்ரா, சகாதேவராஜா டிவானுஜா, தங்கவடிவேல் டயானு ஆகியோர் 3 ஏ சித்திகளையும், ராஜேஸ்வரன் கம்ஷாயினி இரண்டு 'ஏ' ஒரு 'பி' சித்தியையும் பெற்று மருத்துவத்துறைக்குத் தெரிவாகியுள்ளனர். இதேவேளை ரஜிநாதன் துர்க்கா மூன்று 'ஏ' சித்திகள் பெற்று பொறியியல் துறைக்குத் தெரிவாகியுள்ளார்.

இந்த ஐந்து சாதனை மாணவிகளின் வீடுகளுக்குச் சென்ற தவிசாளர் ஜெயசிறில், நிதி அன்பளிப்பையும் வாழ்த்துக்களையும் வழங்கினார். கூடவே அவரது ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜாவும் சமுகமளித்திருந்தார்.

சாதனை மாணவர்களின் பெற்றோர் இவ்வாறு வீடு தேடி வந்து வாழ்த்தி ஊக்கப்படுத்தியமைக்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

அங்கு தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கருத்து தெரிவிக்கையில் "எமது காரைதீவு மண்ணுக்கு பெருமை சேர்த்த கல்விச் சாதனையாளர்களை பாராட்டுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதுவும்








வரலாற்றில் நான்கு மாணவர்கள் ஒரே தடவையில் மருத்துவத் துறைக்கு தெரிவாகியமை பாராட்டுக்குரியது. பொதுவாக சமய சமூக செயற்பாடுகளில் முன்னணியில் செயற்படும் பிரமுகர்களின் பிள்ளைகளே இச்சாதனைகளை புரிந்துள்ளனர். மக்கள் சேவைகள் என்றும் நல்லதையே தரும் என்பதற்கு இது நல்ல சான்று. காரைதீவுக்கு பெருமை சேர்த்த மாணவர்கள் மற்றும் அதற்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் பிரதேசசபையின் தலைவர் என்ற முறையில் நன்றியுடன் பாராட்டுகிறேன்" என்றார்.

இதற்கு முன்னதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பியசேன, காரைதீவில் இலங்கை கல்வி நிருவாக சேவை பரீட்சையில் சித்தி பெற்று தெரிவான சோ.ஸூரநுதன், மு.தர்சிகா, நே.வரணியா ஆகியோரின் வீடுகளுக்கு நேரில் சென்று பரிசு வழங்கி பாராட்டினார்.

காரைதீவு குறூப் நிருபர்...

# மனிதனின் செயற்பாடுகளால் கிழக்கில் அழிவடையும் கண்டல் தாவரங்கள்!

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களில் இயற்கையாக அமையப் பெற்ற கண்டல் தாவர சாகியம் கடந்த இரண்டு தசாப்தங்களாக நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை, 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட இயற்கை அனர்த்தமான சுனாமி போன்றவற்றினாலும் மனிதர்களின் சுயநலமான பாவனையாலும் அழிந்து போகும் சூழ்நிலை உருவாகி வருவது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

உலர்நீரிலும் நன்னீரிலும் வளரக்கூடிய கண்டல் தாவரங்கள் ஏனைய தாவரங்களை விட வித்தியாசமானவை. சொனரேசியா ,புறூகைரா, அவிசீனியா, றைசோபோரா போன்ற தாவரங்கள் தாம் வாழும் சூழலுக்கு ஏற்ப வளர்ச்சியை காட்டுவதாக அமையும்.

கண்டல் தாவரங்கள் வளரும் சூழல் உவர்த்தன்மை அதிகமாக உள்ளதால், தாவரங்களின் வித்துக்கள் முளைப்பதில் பல சிக்கல் நிலை ஏற்படுவதால் மரத்திலிருக்கும் போதே முளைத்து சதுப்பு நீரில் மரம் விழுந்து முளைக்கக் கூடிய சீவச முளைத்தல் செய்முறையை மேற்கொள்ளக் கூடிய விசேட வகை முளைத்தலை ஏற்படுத்தி தனது இனத்தை பெருக்கிக் கொள்ளும்.

தாம் வாழும் சதுப்புநீரில் ஒட்சிசனின் அளவு குறைவாக இருக்கும் போது வேரினை புவியீர்ப்பிற்கு எதிராக மூச்சு வேர்களை தோற்றுவித்து மேல்நோக்கி திருப்பி வளிமண்டல ஒட்சிசனைப் பெற்று தாவர வளர்ச்சிக்கு உதவி புரியும்.

ஆதிகால மனிதன் சூழல் தொகுதிற்கு எந்தவிதமான தீங்கையும் விளைவிக்காமல் நிறைய நன்மைகளைப் பெற்று வந்தான்.





ஆனால் நவீன காலத்தில் வாழும் மனிதர்கள் பலவிதமான தீங்குகளை இச்சூழல் தொகுதிக்கு செய்து கொண்டே நன்மைகளைப் பெற்று வருகின்றார்கள்.

இக்கண்டல் தாவரங்களின் இளம் தளிர்கள் கரையோர மக்களினால் பெருமளவில் உணவாக பயன்படுத்தப்படுகின்றன.

கண்டல் தாவரங்களின் தண்டுகள் கட்டட பாவனைக்கு தடியாகவும், றைசோபோறா, அவீசீனியா, புறூகைறா போன்றவற்றிலிருந்து பெறப்படும் வெட்டுமரங்கள் படகு கட்டவும், மீன்பிடி உபகரணங்கள் செய்யவும் பயன்படுத்தப்படுகின்றன.

கண்டல் தாவரங்கள் சூழலை மாசுபடுத்தும் காரணிகளை உறிஞ்சக் கூடியனவாக இருப்பதனால் தாம் வாழும் நீர்ச்சூழலில் மாசுபடுத்தலை குறைக்கின்றன.கண்டல் காடுகள் பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு புகலிடமாகவும் இருக்கின்றது.

பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இந்த கண்டல் தாவரங்களையும் அதன் சூழலையும் பார்வையிடுவதற்காக பெருமளவு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல்லாசப் பயணிகளும் இந்த பிரதேசத்திற்கு பொழுது போக்கிற்காக வருகை தருகின்றார்கள்

இலங்கையை பொறுத்தளவில் 8800 ஹெக்டேயர் நிலப்பரப்பில் கண்டல் தாவரங்கள் வளர்ந்து காணப்படுகின்றன. கண்டல் தாவரங்கள் வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட் வாயுவை குறைப்பதிலும், சூழலில் அதன் தாக்கத்தை குறைப்பதிலும் பாரிய செல்வாக்கை செலுத்துகின்றன.

இவ்வாறாக இயற்கை சூழல் சுழற்சிக்கு பங்களிப்பு செய்யும் கண்டல் தாவர சாதியத்தை பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு எம் அனைவருக்கும் உரித்தானது.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# நகர்வலம்





கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி விரதம் அலங்கார சித்திரத் தேர் திருவிழா நேற்று காலை நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.

## அநுராதபுரம் சாஹிராவில் இருவர் மருத்துவத்துறைக்கு தெரிவு

**(திறப்பனை தினகரன், அ.புரம் மேற்கு தினகரன் நிருபர்கள்)**

வெளியான க.பொ.த. (உயர்தர) பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் அநுராதபுரம் சாஹிரா தேசியப் பாடசாலையிலிருந்து இம்முறை 16 மாணவர்கள் பல்கலை கழகம் நுழையும் வாய்ப்பை பெறுவர் என கல்லூரி அதிபர் எம்.கே.எம்.ஜாபர் தெரிவித்தார்.

02 மாணவிகள் இம்முறை மருத்துவ பிரிவுக்கும், 01 மாணவன் பொறியியல் பிரிவுக்கும், 07 மாணவர்கள் விஞ்ஞான பிரிவுக்கும், 02 மாணவர்கள் கணித பிரிவுக்கும், 01 மாணவன் வர்த்தக பிரிவுக்கும், 03 மாணவர்கள் கலை பிரிவுக்குமாக பல்கலை கழக அனுமதிக்கான தகுதியை பெறும் வாய்ப்பை பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜே.எப்.இன்சிராஹ் 03 ஏ (மருத்துவம்), ஜே.எப். நஜுஹா 02 ஏ,பி (மருத்துவம்), டி.எம். முன்சிப் 03 பி (பொறியியல்), எம்.ஜே.எப். சபிய்யா செய்னப் ஏ பி சி (விஞ்ஞானம்), எம்.பி.நுஹா 02 பி சி (விஞ்ஞானம்), ஏ.எம்.முபஸ்மிலா 02 பிசி (விஞ்ஞானம்), எம்.என். எம்.பர்வீன் 03 சி (விஞ்ஞானம்), எம்.எச்.எப்,ரிஷாதா பி 02 சி (விஞ்ஞானம்), எம்.என்.ஸபா 03 சி (விஞ்ஞானம்), ஏ.ஆர்.பி.அப்ரா 02 சி எஸ் (விஞ்ஞானம்), எம். ஆர்.இல்ஹாம் பி2 சி (கணிதம்), எம்.என்.எம். நபீஸ் 02 சி எஸ் (கணிதம்), எம்.எஸ்.எப்,சஹாமா 02 ஏபி (கலை), எம்.என். ஹனா ஏ 02 பி (கலை), எம். எப். அப்ரா 02 பிசி (கலை), எம்.எம்.ஒஸாமா ஏ சீ எஸ் (வர்த்தகம்) என்ற அடிப்படையில் இம்முறை பல்கலை கழகம் நுழையும் வாய்ப்பை பெறுவர் என அதிபர் மேலும் தெரிவித்தார்.

## குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் பலி

**(புத்தளம் விசேட நிருபர்)**

தனது பிள்ளைகளுக்கு மீன் சமைத்து உண்ணக் கொடுப்பதற்காக மீன் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளதாகக் கூறி, பிள்ளைகளின் உணவுக்காக வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள குளத்திற்கு மீன் பிடிக்கச் சென்ற 54 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையொருவர் அக் குளத்து நீரில் மூழ்கி உயிரிழந்த துயரச் சம்பவம் ஒன்று பிங்கிரிய, ஹிருவல்பொல பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

ஹிருவல்பொல, ஹிரிவெவ எனும் குளத்தில் மீன் பிடிக்கச் சென்று தன்னால் போடப்பட்டிருந்த வலையில் சிக்கி நீரில் மூழ்கியே இவ்வாறு ஹிரிவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார். இவரது மரணம் தொடர்பில் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் மரண விசாரணை நடைபெற்றது.

## பாவனைக்குதவாத 400 மூடை பொன்னி சம்பா அரிசி மீட்பு

### நுகர்வோர் அதிகாரசபை அதிரடி வேட்டை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

மனித பாவனைக்கு உகந்தவை அல்ல என சந்தேகிக்கப்படும் 400 க்கும் அதிகமான பொன்னி சம்பா அரிசி மூடைகளின் மாதிரியினை அரச பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி பகுப்பாய்வு அறிக்கையொன்றினை பெற்றுக் கொள்வதற்கு நுகர்வோர் அதிகார சபையின் அநுராதபுரம் அலுவலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நுகர்வோர் அதிகார சபையின் உத்தியோகத்தர்களினால் அண்மையில் கெக்கிராவ கனேவள்பொள பகுதியிலுள்ள அரிசி ஆலையொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே மனித பாவனைக்கு உகந்தது அல்ல



என சந்தேகிக்கப்படும் 50 கிலோ நிறையுடைய 400 க்கும் அதிகமான பொன்னிச் சம்பா அரிசி மூடைகளை அதிகார சபையின் அநுராதபுரம் அலுவலக சுற்றிவளைப்பு குழுவினர் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைவாக கெக்கிராவ நீதிமன்றில் பெறப்பட்ட அனுமதியின் பேரில் இருபது ஆயிரம் கிலோவிற்கும் அதிகமான அரிசியினை குறித்த அரிசி ஆலையிலேயே சீல் வைக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் பெறுமதி சுமார் 35 இலட்சத்திற்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அரிசி ஆலை உரிமையாளருக்கு எதிராக கெக்கிராவ நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இச்சுற்றிவளைப்பினை நுகர்வோர் அதிகார சபையின் அநுராதபுரம் அலுவலக பொறுப்பதிகாரி டீ.ஏ.சீ.பீ.பெரேரா தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னாள் அமைச்சர் சந்திரசேனவின்

## வீட்டை தாக்கி சேதப்படுத்திய இருவர் சந்தேகத்தில் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கடந்த மே மாதம் நாட்டில் ஏற்பட்ட கலவரத்தின்போது முன்னாள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவின் வீட்டினை தாக்கி சேதப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் சந்தேக நபர்கள் இருவரை மிஹிந்தலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மிஹிந்தலை பொலிஸ் பிரிவின் மாத்தளை சந்தி பகுதியில் 30 ஆம் திகதியன்று நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் இருவரை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் 36,32 வயதுடைய மிஹிந்தலை மாத்தளை சந்தி மற்றும் மிஹிந்தலை குருந்தங்குளம் பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸ் பீ அறிக்கையூடாக அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து இன்று செப்டம்பர் (01) வரைக்கும் விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளதுடன் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் அநுராதபுரம் நீதிமன்ற நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## செம்பு கம்பிகள் திருடிய குழுவொன்று கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை சிறுநீரக நோயாளர்களுக்காக ஒக்சிஜன் சிலிண்டர்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஆறு செம்பு கம்பிகளை இனந்தெரியாத குழுவினர் திருடிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை (இல 38) சிறுநீரக பிரிவில் பூட்டி வைக்கப்பட்டிருந்த ஒக்சிஜன் அறையின் பூட்டு உடைக்கப்பட்டு ஆறு செம்பு கம்பிகளும் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர் ஒருவர் (29) வைத்தியசாலை பொலிஸ் பிரிவில் செய்த முறைப்பாட்டிற்கு அமைய ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் அனுசரணையோடு வை.எம்.எம்.ஏ.யின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி தினகரனில் எழுதிய நேர்காணல் பத்திகளின் தொகுப்பு நூல், "இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம்.ரிஸ்மியுடனான நேர்காணலும்' நூல் வெளியீட்டு விழாவில் இளம் தலைமைத்துவ ஊடக துறைசார்ந்தோரை, கௌரவிக்கும் வரிசையில், இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின், முதல் பெண் பணிப்பாளர் எனும் பெருமையை தனதாக்கிக் கொண்ட எம்.ஜே.பாத்திமா ரினோஸியா கௌரவம் பெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

## புத்தளம் வெட்டாளை முஸ்லிம் வித்தியாலய பொன் விழா நிகழ்வுகள் இன்று ஆரம்பம்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் முள்ளிபுரம் வெட்டாளை முஸ்லிம் வித்தியாலயத்தின் 50 வருட பூர்த்தியை கொண்டாடுகின்ற பொன் விழா நிகழ்வுகள் இன்று 01 மற்றும் 02, 03 ஆம் திகதிகளில் பாடசாலை வளாகத்தில் மிக விமரிசையாக இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஜே.எம். இல்ஹாம், பிரதி அதிபர் எம்.எஸ். எம்.மொஹிதீன், பாடசாலை முகாமைத்துவ குழுவினர்கள்,

பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரின் பங்களிப்போடு இந்த நிகழ்வுகள் மிக விமரிசையாக இடம்பெறவுள்ளன. இன்றைய நிகழ்வில் கல்வி அதிகாரிகள் பங்குபற்றவுள்ளதுடன் இரண்டாம் நாள் நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட பாடசாலையின் பிரதான நுழைவாயிலினை பாராளுமன்ற உறுப்பினர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளதோடு பழைய மாணவர் சங்கத்தின் ஒத்துழைப்புடன் நகர் முழுவதும் விழிப்புணர்வு ஊர்வலமும் இடம் பெறவுள்ளது.

மாலைநேர அமர்வில் புத்தளம் நகர பிதா எம்.எஸ். எம்.ரபீக் மற்றும் நகரசபை உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் கலை கலாசார நிகழ்வுகள், புத்தளம் சாஹிரா கல்லூரி புத்தளம் பாத்திமா கல்லூரி மாணவர்களுக் கிடையிலான விவாத அரங்கு, கவிஞர்கள் பலர் கலந்துகொள்ளும் கவியரங்கம், முன்னாள் அதிபர்கள் கௌரவிப்பு, புத்தளம் ஜனாதிபதி விஞ்ஞான கல்லூரி மாணவர்களின் அறிவியல் சார்ந்த தொழில்நுட்ப காட்சி மற்றும் கண்காட்சி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அதேவேளை, மூன்றாம் நாள் நிகழ்வில் சிறுவர்களுக்கான கலை கலாசார நிகழ்வுகள் வேடிக்கை வினோத நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெற இருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## புத்தளம்; இஹ்யாவுல் உலூமில் மூன்றாவது பட்டமளிப்பு விழா

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் முள்ளிபுரம் பிரதேசத்தில் அமைந்துள்ள இஹ்யாவுல் உலூம் அரபுக் கல்லூரியின் 3 வது பட்டமளிப்பு விழா சனிக்கிழமை (27) நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் எல்.எம்.சனூஸ் (ரஹ்மானி) தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் பிரதம அதிதியாகவும் ஹிழ்ரியா அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் நஜூமுதீன் முப்தி விஷேட பேச்சாளராகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, ஹாபில் மற்றும் மௌலவி பட்டம் பெற்ற 50 மாணவர்களுக்கு அதிதிகள் சான்றிதழ் வழங்கி கௌரவித்தனர். இந்த நிகழ்வில் கல்லூரியின் தலைவரும், தொழிலதிபருமான எம்.சப்ரின், வைத்தியர் அஸ்லம், புத்தளம் நகர சபை உறுப்பினர் முகம்மது அஸ்கீன் உட்பட கல்விமான்கள், அரபு கல்லூரிகளின் அதிபர்கள், அரசியல் பிரமுகர்கள், மத்ரஸா மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தென் மாகாண பாடசாலை மட்ட

## தமிழ் மொழித்தின போட்டிகள் இம்மாதம் 07ஆம் திகதி ஆரம்பம்

### வெற்றியீட்டும் போட்டியாளர்கள் வலய மட்ட போட்டிகளுக்கு தெரிவு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

அகில இலங்கை தமிழ் மொழித்தின காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலுள்ள வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் இம்மாதம் 07, 14, 21ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு இரண்டு பிரிவுகளாக இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதன் பிரகாரம், எழுத்துப் போட்டிகள் வெலிதர முஸ்லிம் வித்தியாலயம், அல் மீரான் கல்லூரி, மாத்தறை தாருல் உலூம் மகா வித்தியாலயம், வெலிகம மதுராபுர அஸ்ஸபா வித்தியாலயம், தெனியாய சென் மத்தியூ கல்லூரி, ஹம்பாந்தோட்டை ஸாஹிரா மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

ஏனைய போட்டிகள் காலி மற்றும் எல்பிடிய வலய மட்டப் போட்டிகள் காலி ஸுலைமானிய மகா வித்தியாலத்திலும் மாத்தறை மற்றும் அக்குரஸ்ஸ வலய மட்டப் போட்டிகள் மாத்தறை தாருல் உலூம் மகா வித்தியாலயத்திலும் ஹம்பாந்தோட்டை வலயப் போட்டிகள் ஹம்பாந்தோட்டைஸாஹிராமத்தியகல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய போட்டியாளர்களே வலய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெறுவரென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## ஐஸ் வகை போதைப்பொருள் மற்றும் 15 இலட்சம் பணத்துடன் ஒருவர் கைது

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

மதுரங்குளி சமீரகம பகுதியில் ஐஸ் ரக போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் (30) கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு போதை ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விஷேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 30 கிராம் ஐஸ் ரக போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து 15 இலட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரும், சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஐஸ் ரக போதைப் பொருள் மற்றும் பணம் என்பனவும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மதுரங்குளி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## விருதோடையில் கல்வி அபிவிருத்தி குழு ஸ்தாபிப்பு

**(புத்தளம் விசேட நிருபர்)**

புத்தளம் தெற்கு கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட விருதோடை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு கல்வி அபிவிருத்திக் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலையின் கல்வி மற்றும் பௌதீக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை மாலை பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் என். எம்.எம். சதாத் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் தனவந்தர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் ஆகியோரை உள்ளடக்கி 15 பேரைக் கொண்ட குழு ஒன்று அன்றைய தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, அந்தக் குழுவுடன் பாடசாலையின் பழைய மாணவர்களான துறைசார்ந்த 10 பேரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## கடாண்டுகம ஜாயா மாணவன் உயிரியல் பிரிவில் 2A, B சித்தி

அண்மையில் வெளியான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி அ/ கடாண்டுகம ஜாயா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் உயிரியல் பிரிவில் பரீட்சைக்கு தோற்றிய செல்வன் ஏ.ஆர். அன்சப் 2ஏ,1பீ சித்தியினைப் பெற்று மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ளார்.

இவர் 2.1850 இஸட் ஸ்கோர் பெற்று மாவட்டத்தில் 9 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். இவர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கும் அதே பாடசாலையில் கல்வி கற்று 9 ஏ சித்தியினை பெற்று சாதனையை ஏற்படுத்தினார்.

நெல்லியகம கிராமத்திலிருந்து மருத்துவ பீடத்திற்கு தெரிவாகும் மூன்றாவது மாணவன் இவராகும்.



'கொவிட் 19' காரணமாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு உதவிட ரூ. 3500 பெறுமதியான இலவச சதோச பற்று சீட்டுக்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட மக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சிக்கு ஏற்ப மட்டக்குளி வட்டாரத்தில், கொழும்பு மாநகர சபை முதல்வரின் செயலாளர்.எம்.ஜே.ஜெயசங்கர் பங்களிப்புடன் மாநகர சபை உறுப்பினர் அல்ஹாஜ் லாஹிர் தலைமையில் வடகொழும்பு மக்களுக்கு வழங்கப்பட்டது. இதன்போது மொஹமட் நௌசாட் உள்ளிட்டோர் கலந்துக்கொன்டிருப்பதை படத்தில் காணலாம்.
(படம்: எம். நசார்)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



## முன்னாள் அமைச்சர்...

முன்னாள் புலி உறுப்பினரான தம்பையா பிரகாஷ் எனப்படும் தனுஷ் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரால் கம்பஹா உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணையில் காசிரத்னம் பிரதீப் , முஹம்மத் அலி ஹசன் ஹன்சார், முன்னாள் கம்பஹா பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹெக்டர் தர்மசிறி,முன்னாள் கம்பஹா பொலிஸ் அத்தியட்சகர் தினேஷ் கருணாநாயக்க, உள்ளிட்ட பலரும் சாட்சி வழங்கியுள்ளார்கள். உயர் நீதிமன்ற பல நீதிபதிகளால் பல ஆண்டுகளாக விசாரிக்கப்பட்டு வந்த இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு இன்று(01) அறிவிக்கப்படவுள்ளது.

## பல்கலை ஒன்றிய... (03 ஆம் பக்கத் தொடர்)

பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. சுகாதார அமைச்சுக்கு முன்பாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தபோதே 28 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

## 04 வெள்ளை முட்டைகள்...

அதிகமாக முட்டை ஒன்றுக்கு 65 ரூபா வீதம் என்ற அடிப்படையில் நான்கு முட்டைகளை 260 ரூபாவுக்கு அந்த வர்த்தகர் விற்பனை செய்ததாக நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

## எதிரணியில் அமர்ந்த GL...

இந்த தீர்மானத்தில் தம்மோடு டளஸ் அழகப்பெரும, டிலான் பெரேரா, நாலக்க கொடஹேவா, சரித்த ஹேரத், சன்ன ஜயசுமன, கே.பி.குமாரஸ்ரீ, குணபால ரத்னசேக்கர, உதயன கிரிந்து கொட, வசந்த யாப்பா பண்டார, உபுல் கலப்பத்தி, திலக் ராஜபக்ஷ, லலித் எல்லாவல ஆகியோர் இணைந்து கொண்டுள்ளமையையும் அவை சபையில் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் சுயாதீன குழுவாக எதிர்க்கட்சியில் அமர்ந்து தம்முடன் 13 பேர் நேற்று முதல் செயற்படப்போவதாக தெரிவித்த பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்,அரசாங்கம் முன்னெடுக்கும் மக்களுக்கான சிறந்த திட்டங்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாரென்றும் குறிப்பிட்டார்.

இந்த தீர்மானத்தை அறிவித்து சபையில் நேற்று உரையாற்றிய பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ், பொது ஜன பெரமுன மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி எதனையும் நிறைவேற்ற வில்லையென்ற காரணத்தினாலேயே தமது குழு பாராளுமன்றத்தில் சுயாதீனமாக எதிர்க்கட்சியில் அமர்ந்து செயல்படுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். இந்த அறிவிப்பையடுத்து எதிர்க்கட்சியில் அமர்வதற்கு சென்ற மேற்படி குழுவினரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கைகளைக் கூப்பியும் கைலாகு கொடுத்தும் வரவேற்றார். அத்துடன் சுயாதீனமாக செயற்படும் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினரும் அவர்களை வரவேற்றமை குறிப்பிடத்தக்கது.

## 20 மாவட்டங்களுக்கு...

சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலைப் பாங்கான சரிவுகளில் (குறிப்பாக மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகள்) மற்றும் ஆற்றுப் படுகைகளை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. மலைப்பாங்கான பகுதிகளிலும் சரிவுகளிலும் உள்ள சாலைகளைப் பயன்படுத்தும் வாகன ஓட்டிகள், மின்னல், நிலச்சரிவு போன்றவற்றால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து அவதானமாக இருக்குமாறும் மரங்கள், பாறை சரிவுகள் மற்றும் மின்கம்பிகள் விழுவது குறித்தும் அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கப்படுகிறார்கள். இதன்படி, திருகோணமலை, அனுராதபுரம், புத்தளம், பொலன்னறுவை, மாத்தளை, மட்டக்களப்பு, குருநாகல், கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரெலியா, பதுளை, அம்பாறை, மொனராகலை, களுத்துறை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை உள்ளிட்ட 20 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தமிழகம் முழுவதும்...

பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கட்டுமானப் பணிகளை, தமிழக சிறுபான்மையினர் நலம் மற்றும் வெளிநாட்டுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பார்வையிட்டுள்ளார். இதன்போது செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், திண்டுக்கலில் நிர்மாணிக்கப்பட்டுவரும் 321 வீடுகளை மாதிரியாகக் கொண்டு, தமிழகத்தின் பிற பகுதிகளிலுள்ள முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். கட்டுமானப் பணிகள் முடிவடைந்ததும், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், இந்தக் குடியிருப்புகளை இலங்கைத் தமிழர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஹட்டன் நகர சபை... (03 ஆம் பக்கத் தொடர்)

பெருந்தோட்ட தொழிற்துறையின் வீழ்ச்சி தொடர்பில் குற்றஞ்சாட்டுவதாயின் குறுகிய கால கட்டத்தை மாத்திரம் மதிப்பிட முடியாது.

தேயிலை தொழிற்துறை வீழ்ச்சிக்கு உர பற்றாக்குறை மாத்திரம் பிரதான காரணமல்ல. தோட்டங்கள் முறையாக நிர்வகிக்கப்படுவதில்லை. வரவு செலவு திட்டத்தில் பல்வேறு சாதகமான விடயங்கள் உள்வாங்கப்பட்டிருந்தாலும் ஒருசிலர் வரவு செலவு திட்டம் தொடர்பில் குறிப்பிடுகையில் மலையக மக்கள் வரவு செலவு திட்டத்திற்குள் உள்வாங்கப்படவில்லை என அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

இடைக்கால வரவு செலவு திட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் சமுர்த்தி பயனாளிகளுக்கும் வறுமைக் கோட்டில் உள்ள 61,000 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.இந்த நிவாரண கொடுப்பனவுகள் மலையக மக்களுக்கு ஏதாவதொரு வழிமுறையில் கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கையுண்டு

இலங்கையர் என்ற ரீதியில் நாம் ஒன்றிணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளோமே தவிர மலையகம் என வேறுப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அனர்த்தங்களுக்கு முகம்... (03 ஆம் பக்கத் தொடர்)

மற்றும் விமானப் படைவீரர்களையும் தயார் நிலையில் வைப்பதற்கு தேவையான சகல அறிவுறுத்தல்களையும் விமானப் படைத் தளபதி வழங்கியுள்ளதாக விமானப் படையின் நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளித்த விமானப் படையின் பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு அண்மித்த பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக காணப்படும் சீரற்ற காலநிலையினால் நாட்டின் பல பகுதிகளில் தொடர் மழை பெய்து வரும் நிலையில் வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. இதனால் ஏற்படும் எந்தவொரு அனர்தங்களுக்கும் முகம் கொடுக்கும் வகையிலும் பாதிக்கப்படும் மக்களை பாதுகாப்பாக மீட்டெடுக்கும் மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்கும் வகையிலேயே இலங்கை விமானப் படை தயார் நிலையில் வைக்க விமானப் படைத் தளபதி அறிவுறுத்தியுள்ளார். இதேவேளை, திடீர் காலநிலை மாற்றம் காரணமாக எதிர்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள், வெள்ளப் பொருக்கு, மணிசரிவு போன்ற அனர்த்தங்கள் தொடர்பில் கண்காணிக்க விமானப் படையின் கண்காணிப்பு விமானங்கள் ஈடுப்படுத்தப்பட்டுள்ள அதேசமயம், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பாக மீட்டெடுக்கும் மற்றும் நிவாரண உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுப்படுத்த விமானப் படையின் சிறப்பு பயிற்சி பெற்ற வீரர்களும் ஹெலிகொப்டர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தோட்ட தொழிலாளர்... (03 ஆம் பக்கத் தொடர்)

குறைந்த விலையில் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இடைக்கால வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பாண்விலை அதிகரித்து பேக்கரிகள் 60 விதமானவை மூடப்பட்டுள்ளன. ஒரு உணவுப் பார்சலின் விலை 500 ரூபாவாக அதிகரித்துள்ளது.வாகன விற்பனையாளர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். ஆடைத் தொழில் வீழ்ச்சியுற்றுள்ள நிலையில் சுற்றுலாத் துறையும் வீழ்ச்சி கண்டுள்ளது. நாட்டில் அமைதியற்ற நிலை காணப்படுவதால் உல்லாசப் பிரயாணிகள் இங்கு வருவதற்கு அச்சம் கொள்கின்றனர். இவற்றை நிவர்த்திக்கும் அதே வேளை, வெளிநாட்டுக் கொள்கையிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தனியார் முதலீட்டாளர்களின்... (03 ஆம் பக்கத் தொடர்)

செயற்பாடுகளை தற்காலிகமாக முன்கொண்டு செல்வதற்கான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

தோல்வியடைந்த அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி கருத்து தெரிவித்துள்ளதையடுத்து, கடந்த கால அரசாங்கத்தின் வினைத்திறனற்ற செயற்பாட்டினால் பின்னடைவை சந்தித்துள்ள வடகடல் நிறுவனத்தையும் அந்நிறுவனத்தின் பணியாளர்களையும் பங்குதாரர்களாக கொண்டு தனியார் முதலீட்டாளர்களை உள்ளீர்ப்பது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடந்த 03 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாத நிலையில் வடகடல் நிறுவனத்தின் லுணுவில வலை உற்பத்தி தொழிற்சாலையின் பணியாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, தமது மனக் குமுறல்களை எடுத்துரைத்தனர்.

அவற்றை புரிந்து கொண்ட கடற்றொழில் அமைச்சர், ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி, உரிய பரிகாரம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

## அறுபது தங்க... (03 ஆம் பக்கத் தொடர்)

குழுவினால் கைது செய்யப்பட்டு பின்னர் தங்க பிஸ்கட்டுகளுடன் மேலதிக விசாரணைக்காக விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## பயங்கரவாத தடை... (03 ஆம் பக்கத் தொடர்)

புரிந்துகொள்ள வேண்டும். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் மீது தாக்குதல் நடத்துதல், அவர்களை கைது செய்து தடுத்து வைத்திருக்கும் நீதிமா எத்திற்கு கையெழுத்திடுவது போன்ற செயல்கள் சுவாரஸ்யமானவை.

ஜனாதிபதி தமது இந்தப் போக்கை மாற்றியமைத்து இந்த விடயத்தை மீளாய்வு செய்து வரவு செலவு திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை, சில நபர்கள் தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி செயலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் 156பேரும் 6 அமைப்புகளும் உள்ளடங்கியுள்ளன. அதில் அப்பாவி நபர்களும் உள்ளனர். அப்பாவி மாணவர்கள் பலரும் உள்ளனர். இது தொடர்பான நடவடிக்கைகள் சாட்சிகள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையில் செய்யப்பட்டவையா என்பதை தெரிவிக்க வேண்டும்.

நீதியமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவை இதுதொடர்பில் மீள் பரிசீலனை செய்யவேண்டும். அத்துடன் இந்த தடைப் பட்டியலில் உள்ளவர்களுக்கு பயங்கரவாத விசாரணை பிரிவினர், குற்ற ஒப்புதல் மேற்கொள்ள அழுத்தம் கொடுத்திருக்கின்றனர்.

அதுதொடர்பில் அவர்கள் ஏற்றுக்கொண்டும் உள்ளனர். அதனால் அப்பாவிகளை தடைப் பட்டியலில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் மின்சார கட்டண அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் மத ஸ்தாபனங்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். 180 அலகுகள் பாவித்தால் தற்போதுள்ள கட்டணத்தைவிட பல மடங்கு அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. அதுதொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 10 kg ஐஸ் போதைப்பொருளுடன்...

10.4 கிலோ எடையுள்ள ஐஸ் (சுமார் ரூ. 150 மில்லியன்) தலைமன்னாரிலிருந்து வங்காலை பகுதிக்கு கெப் ரக வாகனத்தில் கொண்டு செல்ல அவர்கள் முயற்சித்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்களை போதைப் பொருட்களுடன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் படையினர் ஒப்படைத்துள்ளனர்.

## பெருந்தொகை பணத்தை...

நிலையான வைப்புக் கணக்கு மற்றும் சேமிப்புக் கணக்கு என்பவற்றில் குறித்த தொகை வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

மேலும் வங்கிக் கிளையொன்றின் பாதுகாப்புப் பெட்டகத்தில் 60 பவுண்களுக்கும் அதிகமான தங்கம் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## விண்ணப்பங்கள் கோரல்...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்...

பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களின் ஆரப்பாட்டம் நடைபெறும் இடம் தொடர்பாக பொலிஸாருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவர்கள் அதனை மீறி வேறு இடத்துக்கு செல்ல முற்பட்டபோதே கைது செய்யப்பட்டு ள்ளார்கள்.

அடிப்படை உரிமை ஒரு தரப்புக்கு மாத்திரம் உரித்தானதல்ல. அனைவரதும் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். அதற்காகவே அப்போது பொலிஸார் செயற்பட்டிருந்தனர். அத்துடன் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பட்டத்தின்போது கைது செய்யப்பட்டவர்கள் எவரையும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யவில்லையென எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளின் போது நாட்டில் நடைமுறையில் உள்ள சாதாரண சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமே தவிர பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் யாரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்போவதில்லையென்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

## பொதுமக்களின் தேவைகளை ...

கொரோனா தொற்று நிலைமை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி காரணமாக அரசாங்க நிறுவனங்களுக்கு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும், மக்கள் தமது பிரச்சினைகளை முன்வைத்து அனுப்பும் கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் வழங்குவதற்கு அரச அதிகாரிகள் கடமைப்பட்டுள்ளனர் என குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அனைத்து கடமை கடிதங்களுக்கும் பதில் அனுப்பும் போது சம்பந்தப்பட்ட கடிதத்தின் கையொப்பத்திற்கு கீழே பொறுப்பான பணியாளர் அதிகாரியின் நேரடி தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எரிபொருள் பற்றாக்குறை....

அவை மூடப்பட்டிருந்தன. அத்துடன் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபடும் பவுஸர்களின் எண்ணிக்கை 300 இலிருந்து சுமார் 100 வரை குறைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் எரிபொருள் விநியோகம் தற்போது மீள சிராக முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய கொலன்னாவை எரிபொருள் முனையத்திலிருந்து நாளாந்தம் 4000 மெட்ரிக் தொன் டீசல் மற்றும் 3000 மெட்ரிக் தொன் பெற்றோல் விநியோகிக்கப்படுகிறது. அது தவிர பொது போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் , பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கும் தொடர்ச்சியாக எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. மேலும் 35,000 மெட்ரிக் தொன் ஒக்டேன் 92 ரக பெற்றோல் செவ்வாய் இரவு தரையிறக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

## கோழி பிரியாணியில்...

விடுவித்துள்ளார். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் சில வைத்தியர்கள் விருந்துபசாரம் ஒன்றுக்காக கோழி பிரியாணியை இந்த ஹோட்டலில் ஓடர் கொடுத்து வாங்கிச் சென்று அதனை உண்பதற்காக திறந்தபோது ஒருவரின் உணவுப் பார்சலில் கோழிப் பொரியல் இறைச்சியுடன் கரப்பான் பூச்சியும் பொரிந்த நிலையில் காணப்பட்டுள்ளது. இதனையடுத்து மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்கு முறைப்பாடு தெரிவித்ததையடுத்து உடனடியாக பொதுச் சுகாதார அதிகாரிகள் இந்த உணவகத்தை சோதனையிட்டதுடன் உணவக உரிமையாளரை மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இதனையடுத்து அவரை எதிர்வரும் 08 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு 25,000 ரூபா சரீரப் பிணையில் செல்ல மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் அனுமதியளித்தார்.

## மரண தண்டனை நிறைவேற்ற...

இது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சட்ட மாஅதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, மரண தண்டனையை அமுல்படுத்துவதில்லை என அரசாங்கம் கொள்கை ரீதியிலான தீர்மானத்தை எடுத்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். இந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார். இந்த மனுக்கள் மீதான விசாரணையைத் தொடர வேண்டிய அவசியம் உள்ளதா என்பது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு நீதியரசர் குழாமின் தலைமை நீதியரசர் விஜித் மலல்கொட மனுதாரரின் சட்டத்தரணிகளுக்கு அறிவித்தார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த நீதியரசர் குழாம், இந்த மனுக்களை அடுத்த ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி ஆராய தீர்மானித்தது.

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு கைதிகளின் மரணதண்டனையை நிறைவேற்றுவதற்கு தாம் கையொப்பமிட தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2019 ஜூன் 26 அறிவித்திருந்தார்.

ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவின் இந்தத் தீர்மானத்தை வலுவற்றதாக்கக் கோரி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கைதிகளைப் பாதுகாக்கும் அமைப்பு உள்ளிட்ட பல தரப்பினர் இந்த அடிப்படை உரிமை மனுக்களை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். முன்னாள் ஜனாதிபதியின் முடிவு அரசாங்க கொள்கைக்கு எதிரானது என்றும் மனுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இது சர்வதேச மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு எதிரானது, நியாயமற்றது என்றும் மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்தை வலுவற்றதாக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு இந்த மனுக்களூடாக நீதிமன்றத்தில் கோரப்பட்டிருந்தது.

## தீர்வு எதுவுமின்றி நகரும் நாட்டுக்கு...

பாதையை திறந்து விட்டது போன்றதென்றும் இவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

**தொழிற்சங்க செயற்பாட்டாளர், சட்டத்தரணி இ. தம்பையா**

ஒரு இக்கட்டான நிலையில் வெளிவந்திருக்கும் வரவு – செலவுத் திட்ட – யோசனைகள் என்றுதான் சொல்வேன். அடுத்த வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும் வரை நிதியைக் கையாள்வதற்காக தயாரிக்கப்பட்ட நிதியறிக்கையாகவே இதைக் கருதுகிறேன். முழுமையாக இந்த நிதியறிக்கையைப் பார்த்தால், பெரிதாக குறை சொல்வதற்கு எதுவும் இல்லை. அதேசமயம் நிதி நிலையை சமாளிக்கும் ஒரு முயற்சியாகவும் படுகிறது. இப்பொருளாதார நெருக்கடியினால் நேரடியாகப் பாதிக்கப்படுவோரின் பாதிப்புகளைக் குறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இவற்றுக்கான நிதியை எங்கே தேடப் போகிறாரகள் என்றுதான் தெரியவில்லை.

**வீ. புத்திரசிகாமணி (முன்னாள் பாராளுமன் உறுப்பினர்):**

ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது இன்றைய சூழலில் இதைவிட பெரிதாக எதையும் செய்துவிட முடியாது. இதை, பெரும் பாதிப்புகளிலிருந்து சாதாரண மக்களைக் காக்கும் ஒரு முயற்சியாகவும் அதே சமயம் முழுமையான ஒரு வரவு செலவுத் திட்ட யோசனைகளை உருவாக்குவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகவும் நான் பார்க்கிறேன். மண்ணெண்ணெய் வழங்கல் பெருந்தோட்டத் துறைக்கும் மீன்பிடித்துறைக்கும் சலுகை விலையில் மேற்கொள்ளப்படுமென்ற யோசனை வரவேற்கத்தக்கது.

**ஓய்வு நிலை பேராசிரியர் துரை மனோகரன் :**

மிகுந்த பிரச்சினைகளுக்கு மத்தியில் எந்தத் தீர்வுமின்றி நகர்ந்து கொண்டிருக்கும் இலங்கைக்கு புதிய பாதை திறந்து விட்ட மாதிரி இந்த நிதியறிக்கை அமைந்திருப்பதாகவே நான் கருதுகிறேன். நான் இதை முழுமையான நிதியறிக்கையாகக் கருதாமல் முழுமையான புதிய நிதிக் கட்டமைப்புக்கான ஆரம்பப்படியாகவே பார்க்கிறேன். இந்த நிதியறிக்கையில் நிவாரணத்தையும், அபிவிருத்தியையும், சம்பள உயர்வையும் எதிர்பார்க்க முடியாது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதால் அதிலிருந்து எப்படி மீளலாம் என்பதாகவே எமது நிதிக்கொள்கைகள் இருக்க வேண்டும். பாதிக்கப்படக் கூடிய பிரிவினருக்கு ஏதேனும் சிறிது நிவாரணங்களை வழங்க இந்த நிதியறிக்கை முனைந்திருப்பதாகவே நான் கருதுகிறேன்.

**வி.முத்துசாமி (உரிமையாளர், ஷர்மிளா டிரவல்ஸ்) :**

இந்த நிதியறிக்கை வழமையான பட்ஜட் அல்ல. எனவே குறைகளை கண்டு பிடித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இதில் நிவாரண உதவிகள் பற்றி சொல்லப்பட்டிருந்தாலும் அதற்கான நிதி ஆதாரங்கள் பற்றி குறிப்புகள் இல்லை. எமது இன்றைய பிரச்சினையே டொலரும் தங்கமும்தான். இவை அதிக அளவில் உள்ள நாடுகளே அபிவிருத்தி கண்ட நாடுகள்.

மன்மோகன்சிங் இந்திய நிதிய மைச்சராக இருந்த போது வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் நாடு திரும்பும்போது இரண்டு கிலோ தங்கம் கொண்டுவரலாம் என்ற சலுகையை அறிவித்தார்.

இதன்பின் இந்தியாவுக்கும் ஏராளமான தங்கம் வந்தது. தற்போது இந்தியாவில் 07 ஆயிரத்து 400 தொன் தங்கம் வங்கியிலுள்ளது. இது போலவே வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர் 05 கிலோ தங்கம் கொண்டு வரலாம் என்றும் அதை அரசுக்கு மட்டும் விற்க முடியும் என்றும் ஒரு திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தினால் பெருமளவு தங்கமும் டொலரும் சுலபமாக நாட்டுக்குள் கொண்டு வரலாம் அல்லவா? என்றார்.

## தாமரைக் கோபுர செயற்பாடு...

நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. தாமரைக் கோபுரத் திட்டத்திற்கு சீன நிறுவனம் 88.65 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்கியுள்ளதுடன், மீதித் தொகையை இலங்கை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இந்தத் திட்டத்திற்காக சீனாவிடம் பெறப்பட்ட கடன் தவணை 2024 ஆம் ஆண்டிற்குள் செலுத்தி முடிக்கப்படவுள்ளது. அத்துடன் ஏற்கனவே கடனாகப் பெறப்பட்ட சுமார் 66 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், இவ்வருடம் மார்ச் மாதம் திறைசேரியின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் அதன் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்படுகிறது.

தாமரை கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி சீன நிறுவனம் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்து மீண்டும் இலங்கை அரசிடம் ஒப்படைத்தது. உலகிலுள்ள செல்வந்த நாடுகளில் இருப்பதைப் போன்ற பொழுதுபோக்கு மற்றும் புதிய தொழில்நுட்ப வசதிகளை வழங்க திட்டமிட்டிருப்பதாக கொழும்பு லோட்டஸ் டவர் தனியார் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். அத்தோடு சாகச விளையாட்டுகளான ஸ்கை டைவிங் (Sky diving ) மற்றும் பங்கி ஜம்பிங் (Bungee jumping) ஆகியவையும் இதில் அடங்கும்.

இதுவரை 80 சதவீதமான உள்நாட்டு முதலீட்டாளர்களும் 20 சதவீதமான வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தாமரை கோபுரத்தில் முதலீடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

டயலொக் டெலிகொம் நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் என்பன தலா 200 மில்லியன் ரூபா முதலீடு செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளன. தாமரைக்கோபுரத்தின் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நுழைவுச் சீட்டைக் கொள்வனவு செய்து, அனைவரும் இதனைப் பார்வையிடவும் புதிய அனுபவங்களை பெறவும் முடியும்.

நுழைவுச் சீட்டொன்றின் விலை 500 ரூபா என்பதோடு விசேட நுழைவுச் சீட்டின் விலை 2,000 ரூபாவாகும். பார்வையிட வரும் வெளிநாட்டவர் ஒருவருக்கான நுழைவுச் சீட்டு 20 அமெரிக்க டொலர்களாகும்.

அடுத்த சில மாதங்களில் நுழைவுச் சீட்டுக்கு பதிலாக QR தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை...

காணப்படும் மோதல்களை தடுப்பதன் மூலம் கிராமிய மட்டத்தில் சமாதானத்தை உருவாக்க அரசியலமைப்பு சட்டக் கட்டமைப்பை தயாரிப்பேனென்றும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி நடைபெறும் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காணாமல் போனோரை நினைவு கூரும் சர்வதேச தினத்துக்காக நீதி அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பாக காணப்படும் பிரச்சினைகள் மற்றும் யுத்தத்தின் பின்னர் உருவான ஏனைய பிரச்சினைகளுக்காக தீர்வை காண்பது, அதனை சர்வதேசத்துக்கு கொண்டு செல்வது என்பவற்றை தேசிய பொறிமுறை மூலம் நம்பிக்கையான கலந்துரையாடல் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அதற்காக தமிழ் டயஸ்போராக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாகவும், தற்போது கனடா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் போன்ற நாடுகளின் டயஸ்போராக்களின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், கலந்துரையாடல் மூலம் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், இன, மத மற்றும் மொழி ரீதியாக மோதல்கள் ஏற்படுவதை தடுத்து மக்களிடையே ஒற்றுமை,நல்லிணக்கம் போன்றவற்றை ஏற்படுத்தும் நோக்கில் புதிய சட்ட கட்டமைப்பு ஒன்றை தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# சவாலான சூழ்நிலைகளுக்கு மத்தியில் மக்கள் வங்கி மீள்தன்மையுடன் உள்ளது

மக்கள் வங்கி ஜூன் 30, 2022 இல் முடிவடைந்த அதன் ஆறு மாத காலத்திற்கான முடிவுகளை அறிவித்தது. மொத்த இயக்க வருமானம் 54.9 வீதம் அதிகரித்து டுமுசு 69.3 பில்லியனை எட்டியுள்ளது, அதே நேரத்தில் மொத்த இயக்கச் செலவுகள் 3.7மூ அதிகரித்து LKR 20.8 பில்லியன் ஆக உள்ளமை பெருகிவரும் பணவீக்க அழுத்தங்கள் இருந்தபோதிலும், செலவுக்கட்டுப்பாடு மற்றும் செயல்திறன் மேம்பாடுகளை பிரதிபலிக்கிறது. குறைபாடு கட்டணங்கள் 319.9 வீதம் அதிகரித்து LKR 32.8 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது அதன் முக்கிய வாடிக்கையாளர் பிரிவுகள் உட்பட பேரின பொருளாதார அழுத்தங்களை பிரதிபலிக்கிறது.

வங்கியின் உயர்மட்ட நிலையில் 75.0 வீதத்துக்கு அருகில் இருந்த நிகர வட்டி வருமானம், சொத்து வளர்ச்சி மற்றும் நிகர வட்டி எல்லை மேம்பாடுகள் இரண்டையும் பிரதிபலிக்கும் வகையில் 30.5 வீதம் வளர்ச்சியடைந்துள்ளது. மொத்த வைப்புத்தொகைகள் 12.6 வீதத்தினால் அதிகரித்து LKR 2,332.8 பில்லியனை எட்டியது. அடுக்கு 1 மற்றும் வங்கியின் தனித்த அடிப்படையில் மொத்த மூலதனப் போதுமான அளவு முறையே 10.4 வீதம் மற்றும் 15.0 வீதம். அதேசமயம், ஒருங்கிணைந்த அடிப்படையில், இது முறையே 11.6 வீதம் மற்றும் 15.6 வீதம்.

முடிவுகள் குறித்து கருத்துத் தெரிவித்த மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, "ஒரு பேரின முன்னணியில் இருந்து அசாதாரணமான சவால்கள் இருந்தபோதிலும், வங்கியின் முடிவுகள் இந்த சூழ்நிலைகளில் செல்லக்கூடிய அதன் திறனைப் பற்றிய சில நுண்ணறிவை வழங்குகின்றன. இறக்குமதிகளில் பெரும்பகுதியை எளிதாக்குவதன் மூலம் அரசாங்கம் மற்றும் நாட்டின் உட்சுற்றுச்சூழல் அமைப்பு செயல்பாட்டை எந்த இடையூறும் இல்லாமல் ஆதரிப்பதில் வங்கி முக்கிய பங்கு வகித்தது" என்றார்.



மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு கூறுகையில் "வட்டி எல்லை மற்றும் கடன் செலவுக் கண்ணோட்டத்தில் அழுத்தங்கள் அதிகரித்து வருவதால், வணிகம், செயல்பாட்டு மற்றும் இடர் முகாமை ஆகியவற்றிலிருந்து எங்கள் தளத்தை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்தியுள்ளோம். தேசிய நலனை மையமாகக் கொண்ட ஒரு வங்கியாக, சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்கள் மற்றும் சில பொருளாதாரத்தின் முக்கியமான சந்தைப் பிரிவுகளுக்கு ஆதரவளிக்க அதிக வளங்களை நாங்கள் ஒதுக்கியுள்ளோம்" என்றார்.

மக்கள் வங்கியானது 743 கிளைகள் மற்றும் சேவை மையங்களைக் கொண்ட இலங்கையின் மிகப் பெரிய வங்கித் தடம் கொண்ட நாட்டின் முதல்நிலை உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும். 61 வருட வரலாற்றைக் கொண்டு, 14.5 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கும் 19.0 மில்லியனுக்கும் அதிகமான கணக்கு உறவுகளுக்கும் அயராது மற்றும் விடாமுயற்சியுடன் சேவை செய்யும் 7,500க்கும் மேற்பட்ட ஊழியர்களின் பலத்தால் வங்கி பயனடைகிறது.


AUTOWHEEL

FAMILY RESTAURANT IS NOW OPEN

AA CEYLON Estd. 1904

FOR TASTY SRI LANKAN FOOD

Live Music in Attendance

"Friday Special Buriyani

RS. 385/- PER PACK

VISIT -

Automobile Association of Ceylon

40, Sir Mohomed Macan Marker Mawatha, Colombo 03

Tele. No: 0774369013 (Krishon)



Raigam

**பங்குதாரர்களுக்கு விடுக்கும் அறிவித்தல்**

**ரைகம் வயம்ப சோல்டன்ஸ் பீ.எல்.சி (PV1022PB/PQ)**

**2020/2021 ஆண்டு அறிக்கையை வெளியிடல்**

கொழும்பு பங்குச் சந்தை மூலம் தீர்மானிக்கப்பட்ட 7.5 (b) (i) ஆம் இலக்க பட்டியலிடல் சட்டத்தில் அண்மையில் நீக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் இருக்கின்ற நிலைமை அடிப்படையில், ஆண்டு அறிக்கை இம்முறை பங்குதாரர் களுக்கு வழங்குவதற்கு எவ்வாறாயினும் முடியாதுள்ளது. நிறுவனத்தினால் 2022 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற நிதி ஆண்டுக்கான நிறுவன செயற்பாடு தொடர்பிலான ஆண்டு அறிக்கை, டிஜிட்டல் ஊடகத்தில் மாத்திரம் கீழுள்ள இணையதளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1) நிறுவன இணையதளம் - **www.wayambasalterns.lk**
2) கொழும்பு பங்குச் சந்தை இணையதளம் - **https://www.cse.lk/pages/company-profile/companyprofile.component.html?symbol=RWSL.N0000**

**விசாரணை** - புஷ்ப ஹேவாமான்னகே 0707061702
**மின்னஞ்சல்** - rwsagm2022@raigam.lk

**பணிப்பாளர்**
**ரைகம் வயம்ப சோல்டன்ஸ் பீ.எல்.சி**
**இல. 23, வாலுகாராம வீதி, கொழும்பு 03.**




யட்டியந்தோட்டை பிரதேச செயலகத்தின் சிறுவர் உரிமைகள் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பட்டம் விடும் திருவிழா நேற்றுமுன்தினம் யட்டியாந்தோட்டை வின்செனட் பெரேரா விளையாட்டரங்கில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள் புலத்கொஹூபிட்டிய குறூப் நிருபர்)*

## தென்கொரிய அரசாங்கத்தினால்

# கேகாலை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வேலைத்திட்டம் ஆரம்பம்

தென்கொரிய அரசாங்கத்தின் சேமாஹூல் அமைப்பின் மூலம் கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கன தேர்தல் தொகுதியை மையமாக கொண்டு விவசாய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் ரம்புக்கன தேர்தல் தொகுதியின் பிட்டியாகம, ஹேவாதிவெல மற்றும் வல்பொல ஆகிய பிரதேசங்களில் உள்ள 140 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சேமாஹூல் ஆயுர்வேத வேலைத்திட்டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் மஞ்சள், மிளகு, பப்பாளி என்பன வளர்க்கப்பட உள்ளது.

இதன் முதற் கட்டமாக கடந்த அண்மையில் பிட்டியாகம, ஹேவாதிவெல மற்றும் வல்பொல ஆகிய பிரதேசங்களில் உள்ள 100 குடும்பங்களுக்கு மிளகு வளர்க்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும் மஞ்சள், மிளகு, பப்பாளி என்பன வளர்ப்பதற்கு தேவையான பயிற்சிகள் உட்பட விதைகள், கன்றுகள், உரம் மற்றும் உபகரண பொருட்கள் என்பன சேமாஹூல் அமைப்பின் மூலம் பெற்று கொடுக்கப்பட உள்ளது.

மேற்படி வேலைத்திட்டத்திற்கு பெருந்தோட்ட அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களம் என்பன உதவிகளையும் வழங்க உள்ளதும்.

மேற்படி தென்கொரிய அரசாங்கத்தின் சேமாஹூல் அமைப்பின் மூலம் கேகாலை மாவட்டத்தில் ஆம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு மேலதிகமாக, இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொடை தேர்தல் தொகுதியை மையமாக கொண்டு மறகரி மற்றும் பழங்கள் உட்பட பாதணி, மண்பாண்ட பொருட்கள் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# பஸ்–முச்சக்கரவண்டி விபத்து; இருவருக்கு கடுங் காயங்கள்

**கம்பளை நிருபர்**

கலஹா தோட்டம் பாலம் அருகில் ஒன்றாம் கட்டை பகுதியில் பஸ் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

கண்டியில் இருந்து தெல்தோட்டை நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று கலஹாவில் இருந்து பேராதெனிய நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டியுடன் மோதியதில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி கலஹா பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் முச்சக்கரவண்டிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை கலஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இலங்கை வங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

## ஏல விற்பனை அறிவித்தல்
## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

1. கடன் தொடர்பு இல. 81766040

   மாகொல, மாகொல வடக்கு, தம்பிலிகஸ்முல்ல சந்தி, இல. 2/7 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. மகவிட்டகே ஜெராட் பெரேரா ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

2. இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 23.08.2019ஆம் திகதி 2138ஆம் இலக்க வர்த்தமானியிலும் 08.08.2019ஆம் திகதி டெய்லி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்கள் 06.10.2022ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மேல்மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை அதிகாரி பற்றுவில் பியகம பிரதேசசபை எல்லைகளுள் பியகம பிரதேச செயலகப்பிரிவில் பொல்லாகல கிராம உத்தியோரித்தர் பிரிவு இல. 228Aல் பட்டிவில கிராமத்தில் அமைந்த "கொஸ்கஹவத்த" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. டீ. வோல்றர் டீ. பெரேரா தயாரித்த 30.04.2014 திகதியிட்ட வரைபடம் இல. 014097ல் விபரித்த துண்டு இல. 1 என அடையாளமிட்ட காணித்துண்டு **வடக்கில்** தற்போது எச். பீ. அக்னஸ் நோனாவின் ஆதனமும், **கிழக்கில்** வரைபடம் இல. 103/1989ல் துண்டு A தற்போது வின்சட் சமரதுங்கவும் ஏனையோரும் உரிமை கோரும் ஆதனமும் தற்போது எச். ஏ. ரோஹினி சந்ரலதா உரிமைகோரும் கொஸ்கஹவத்தயின் மீதிப்பாகமும், **தெற்கில்** ஆர்.ஏ. ரஞ்சனி உரிமைகோரும் ஆதனமும், துண்டு 2ம், **மேற்கில்** தற்சமயம் சுனில் குணசேகர உரிமைகோரும் துண்டு 2 ஹீன்பென்தல கும்புரயும், தற்சமயம் அதாவுத உரிமைகோரும் ஹீன்பென்தல கும்புரயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 014097ன் படி ஒரு ஏக்கர் இருபத்தைந்து' பேர்ச்சுகள் (ஏ1.றூ0.பே.25) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**மேற்குறிப்பிட்ட துண்டு 1 பின்வரும் ஒன்றிணைத்த காணிகளின் ஒரு மீளளவை ஆகும்.**

மேற்குறிப்பிட்ட பட்டிவில கிராமத்தில் அமைந்த "கொஸ்கஹவத்த" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் சுகத் சமரவிக்கிரம தயாரித்த 20.07.1987 திகதியிட்ட வரைபடம் இல. 152/1987ல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் தற்போது எச்.டீ. அக்னஸ் நோனாவின் ஆதனமும், **கிழக்கில்** எச். டீ. அக்னஸ் மற்றும் வின்சன்ட் சமரதுங்க உரிமைகோரும் காணியும், **தெற்கில்** ரோஹினி சந்ரலதா தற்சமயம் உரிமைகோரும் கொஸ்கஹவத்தையும் துண்டுகள் 2 மற்றும் 6ம், **மேற்கில்** சுனில் குணசேகர மற்றும் அதாவுத ஆகியோர் தற்சமயம் உரிமைகோரும் ஹீன்பென்தல கும்புரயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 152/251ன் படி ஒரு ஏக்கர் இரண்டு பேர்ச்சுகள் (ஏ1.றூ0.பே2) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் C445/251ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பட்டிவில கிராமத்தில் அமைந்த "கொஸ்கஹவத்த" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் சுகத் சமரவிக்கிரம தயாரித்த 15.04.1989 திகதியிட்ட வரைபடம் இல. 102/1989ல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் வரைபடம் இல. 152/1987ல் துண்டு 1ம், கிழக்கில் தற்போது ரோஹினி சந்ரலதா உரிமைகோரும் கொஸ்கஹவத்தயின் மீதிப்பாகமும், **தெற்கில்** தற்போது ரோஹினி சந்ரலதா உரிமைகோரும் கொஸ்கஹவத்தயின் மீதிப்பாகமும், மேற்கில் எனது வரைபடம் இல. 152/1987ல் துண்டுகள் 2 மற்றும் 6ம் (20 அடி அகலப்பாதை) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 102/1989ன் படி இருபத்து மூன்று பேர்ச்சுகள் (ஏ0.றூ.பே23) விஸ்தீரணமுடைய காணியும் ' அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் C484/129ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

1. மேற்குறிப்பிட்ட பட்டிவில கிராமத்தில் அமைந்த "கொஸ்கஹவத்த மற்றும் ஹீன்பென்தலகும்புர" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. டீ. வோல்டர் டீ பெரேரா தயாரித்த 30.04.2014 திகதியிட்ட வரைபடம் இல. 014097ல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட காணித்துண்டு **வடக்கில்** துண்டு 1ம், **கிழக்கில்** துண்டு 1ம் ஆர்.ஏ. ரஞ்சனி உரிமை கோரும் ஆதனமும், **தெற்கில்** துண்டு 3ம், **மேற்கில்** தற்சமயம் சுனில் குணசேகர உரிமைகோரும் ஹீன்பென்தல கும்புரயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 014097ன் படி பதினைந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே15) விஸ்தீரணமுடையது.

   **மேற்குறிப்பிட்ட துண்டு 2 பின்வரும் ஒன்றிணைத்த காணிகளின் ஒரு மீளளவை ஆகும்.**

   மேற்குறிப்பிட்ட பட்டிவில கிராமத்தில் அமைந்த "கொஸ்கஹவத்த" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் சுகத் சமரவிக்கிரம தயாரித்த 20.07.1987 திகதியிட்ட வரைபடம் இல. 152/1987ல் 'விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட (பாதைக்கான ஒதுக்கம்) காணித்துண்டு **வடக்கில்** துண்டு 1ம், **கிழக்கில்** தற்சமயம் ரோஹினி சந்ரலதா உரிமைகோரும் கொஸ்கஹவத்தையும், **தெற்கில்** துண்டுகள் 3 மற்றும் 5ம், **மேற்கில்** துண்டு 6ம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 152/1987ன் படி பத்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே10) விஸ்தீரணமுடையது. இது கொழும்பு காணிப்பதிவகத்தில் C470/219ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

   மேற்குறிப்பிட்ட பட்டிவில கிராமத்தில் அமைந்த "ஹீன்பென்தல கும்புர" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் சுகத் சமரவிக்கிரம தயாரித்த 20.07.1987 திகதியிட்ட வரைபடம் இல. 152/1987ல் விபரித்த துண்டு 6 என அடையாளமிட்ட (பாதைக்கான ஒதுக்கம்) காணித்துண்டு **வடக்கில்** ' அதாவுதவின் ஹீன்பென்தல கும்புரயும், **கிழக்கில்** துண்டுகள் 1 மற்றும் 2ம், **தெற்கில்** துண்டு 5ம், **மேற்கில்** சுனில் குணசேகரவின் ஹீன்பென்தல கும்புரயும் எல்லைகளாகக் கொண்டு மேற் குறிப்பிட்ட வரைபடம் இல. 152/1987ன் படி ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.5) விஸ்தீரணமுடையது. இது கொழும்பு காணிப்பதிவகத்தில் C470/212ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட பட்டிவில கிராமத்தில் அமைந்த "மில்லகஹவத்த மற்றும் ஹீன்பென்தலகும்புர" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. டீ. வோல்டர் டீ. பெரேரா தயாரித்த 30.04.2014 திகதியிட்ட வரைபடம் இல. 014097ல் விபரித்த துண்டு 3 என அடையாளமிட்ட (பாதைக்கான ஒதுக்கம்) காணித்துண்டு **வடக்கில்** துண்டு 2ம், **கிழக்கில்** தற்சமயம் எட்மன் குணசேகர உரிமைகோரும் மில்லகஹவத்தையும், **தெற்கில்** பாதையும், **மேற்கில்** ஞானோதயாராமய பௌத்த கோவிலுக்கு சொந்தமான ஹீன்பென்தல கும்புரயும், தற்சமயம் சிறில் குணசேகர உரிமைகோரும் ஹீன்பென்தல கும்புரயும் எல்லைகளாகக் கொண்டு மேற் குறிப்பிட்ட வரைபடம் இல. 014097ன் படி இருபத்தொன்பது பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.29) விஸ்தீரணமுடையது.

   **மேற்குறிப்பிட்ட துண்டு 3 பின்வரும் ஒன்றிணைத்த காணிகளின் ஒரு மீளளவை ஆகும்.**

   மேற்குறிப்பிட்ட பட்டிவில கிராமத்தில் அமைந்த "மில்லகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சுகத் சமரவிக்கிரம தயாரித்த 20.07.1987 திகதியிட்ட வரைபடம் இல. 152/1987ல் விபரித்த துண்டு 3 என அடையாளமிட்ட காணித்துண்டு **வடக்கில்** துண்டு 2ம், **கிழக்கில்** தற்சமயம் எட்மன் குணசேகர உரிமைகோரும் மில்லகஹவத்தையும், **தெற்கில்** பாதையும் (கிராமத்திலிருந்து பியகம வரை பாதை)யும், **மேற்கில்** துண்டு 4 மற்றும் 5ம் தீபா எலயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 152/1987ன் படி பன்னிரெண்டு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே12.50) விஸ்தீரணமுடையது இது கொழும்பு காணிப்பதிவகத்தில் C470/210ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

   மேற்குறிப்பிட்ட பட்டிவில கிராமத்தில் அமைந்த "ஹீன்பென்தல கும்புர" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சுகத் சமரவிக்கிரம தயாரித்த 20.07.1987 திகதியிட்ட வரைபடம் இல. 152/1987ல் விபரித்த துண்டு 4 என அடையாளமிட்ட (பாதைக்கான ஒதுக்கம்) காணித்துண்டு **வடக்கில்** தீபாஎலயிலிருந்து பிரிக்கும் துண்டு 5ம், **கிழக்கில்** துண்டு 3, **தெற்கில்** பாதை (கிராமத்திலிருந்து பியகம பாதை வரை)யும், **மேற்கில்** ஞானோதயாராமய பௌத்த கோவிலுக்கு சொந்தமான ஹீன்பென்தல கும்புரயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 152/1987ன் படி நான்கு பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.4) விஸ்தீரணமுடையது. இது கொழும்பு காணிப்பதிவகத்தில் C470/213ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பட்டிவில கிராமத்தில் அமைந்த "ஹீன்பென்தல கும்புர" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சுகத் சமரவிக்கிரம தயாரித்த 20.07.1987 திகதியிட்ட வரைபடம் இல. 152/1987ல் விபரித்த துண்டு 5 என அடையாளமிட்ட (பாதைக்கான ஒதுக்கம்) காணித்துண்டு வடக்கில் துண்டு 6ம், கிழக்கில் துண்டு 3ம், தெற்கில் தீபாஎலயிலிருந்து பிரிக்கப்பட்ட துண்டு 4ம், மேற்கில் சிறில் குணசேகரவுக்கு சொந்தமான ஹீன்பென்தல கும்புரயும் எல்லைகளாகக் கொண்டு மேற் குறிப்பிட்ட வரைபடம் இல. 152/1987ன் படி பன்னிரெண்டு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.12.50) விஸ்தீரணமுடையது இது கொழும்பு காணிப்பதிவகத்தில் C470/211ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**திருமதி ஜே.டி. ஹெட்டியாரச்சி**
**முகாமையாளர்.**

**இலங்கை வங்கி**
**கிரிபத்கொட மேற்தரக்கிளை.**



## சிலோன் ஹோட்டல்ஸ் கோர்ப்பரேஷன் பிஎல்சி
### 56வது வருடாந்த பொது கூட்டம் (PQ 3283)

சிலோன் ஹோட்டல்ஸ் கோர்ப்பரேஷன் பிஎல்சியின் 56வது வருடாந்த பொதுக்கூட்டம் (AGM) 2022 செப்டம்பர் 27ஆம் திகதி பிற்பகல் 3.30க்கு ஒரு மெய்நிகர் கூட்டமாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2021/2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை, சந்திப்பின் அறிவிப்பு, பதிலாள் படிவம், கூட்டத்தில் ஆன்லைனில் பங்கேற்பதற்கான பதிவுப் படிவம், நிறுவனத்தின் இணையத்தளமான https://www.chcplc.com மற்றும் கொழும்பு பங்குச் சந்தை இணையத்தளமான https://www.cse.lk என்பனவற்றில் ஆகஸ்ட் 31, 2022 முதல் பார்வையிட/பதிவிறக்கக் கிடைக்கும். மே 27, 2022 திகதியிட்ட CSEஇன் 04/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த ஆண்டு வருடாந்த அறிக்கையின் பிரதிகள் அல்லது நகல்கள் வழங்கப்படாது என்பதை நினைவில் கொள்ளவும். நாட்டில் நிலவும் காகிதத் தட்டுப்பாடு காரணமாக சுற்றறிக்கைகள், அறிவிப்புகள் மற்றும் ப்ராக்ஸியின் படிவங்களின் கடின நகல்கள் பங்குதாரர்களுக்கு விநியோகிக்கப்படாது.

AGMஇல் பங்கேற்க விரும்பும் பங்குதாரர்கள், மேற்கூறிய இணையதளங்களில் இருந்து தேவையான படிவங்களைப் பதிவிறக்கம் செய்து, கூட்டத்தில் ஆன்லைனில் பங்கேற்பதற்கான பதிலாள் படிவம் (பொருந்தினால்) மற்றும் பதிவுப் படிவத்தை பூர்த்தி செய்து தங்கள் விவரங்களை மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். ppeiris@deloitte.com என்ற முகவரிக்கு அல்லது +94112504008 என்ற தொலைநகல் மூலம் சந்திப்பு நடைபெறும் திகதிக்கு 48 மணிநேரத்திற்கு குறையாமல் அனுப்பவும். அவ்வாறு வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளுக்கு சந்திப்பு உள்நுழைவுத் தகவல் அனுப்பப்படும்.

ஏதேனும் கேள்விகளை எழுப்ப விரும்பினால், அத்தகைய கேள்விகளை நிறுவனத்தின் செயலாளர்கள், எக்கவுண்டிங் சிஸ்டம்ஸ் செக்ரடிறி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட், என்பனவற்றுக்கு ppeiris@deloitte.com என்ற முன்னுரிமை மின்னஞ்சல் மூலம் சந்திப்பு திகதிக்கு ஐந்து (05) நாட்களுக்கு குறையாமல் அனுப்ப வேண்டும் அல்லது + 94112504008 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பலாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
சிலோன் ஹோட்டல்ஸ் கோர்ப்பரேஷன் பிஎல்சி
எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
செயலாளர்கள்
01/09/2022



## 93வது வருடாந்த பொதுக் கூட்டம்
## கண்டி ஹோட்டல்ஸ் கம்பெனி (1938) பிஎல்சி
## (PQ 201)

The Kandy Hotels Company PLC இன் 93ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் (AGM) 2022 செப்டெம்பர் 23ஆம் திகதி காலை 9.30 மணிக்கு, மெய்நிகராக இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

2021/2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை, சந்திப்பின் அறிவிப்பு, பதிலாள் படிவம், கூட்டத்தில் பங்கேற்பதற்கான ஆன்லைன் பதிவுப் படிவம், நிறுவனத்தின் இணையதளமான https://www.chcplc.com மற்றும் Colombo Stock Exchange இணையதளமான https://www.cse.lk இல் 31 ஆகஸ்ட் 2022 முதல் பார்வையிட/பதிவிறக்கக் கிடைக்கும். மே 27, 2022 திகதியிட்ட CSEஇன் 04/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த ஆண்டு வருடாந்த அறிக்கையின் பிரதிகள் வழங்கப்படாது என்பதை நினைவில் கொள்ளவும். நாட்டில் நிலவும் காகிதத் தட்டுப்பாடு காரணமாக சுற்றறிக்கைகள், அறிவிப்புகள் மற்றும் ப்ராக்ஸியின் படிவங்களின் கடின நகல்கள் பங்குதாரர்களுக்கு விநியோகிக்கப்படாது.

AGM இல் பங்கேற்க விரும்பும் பங்குதாரர்கள், மேற்கூறிய இணையதளங்களில் இருந்து தேவையான படிவங்களைப் பதிவிறக்கம் செய்து, கூட்டத்தில் ஆன்லைனில் பங்கேற்பதற்கான பதிலாள் படிவம் (பொருந்தினால்) மற்றும் பதிவுப் படிவத்தை பூர்த்தி செய்து தங்கள் விவரங்களை மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். ppeiris@deloitte.com என்ற முகவரிக்கு அல்லது +94112504008 என்ற தொலைநகல் இலக்கத்துக்கு சந்திப்பு நடைபெறும் திகதிக்கு 48 மணிநேரத்திற்கு குறையாமல் அனுப்ப வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளுக்கு சந்திப்பு உள்நுழைவுத் தகவல் அனுப்பப்படும்.

பங்குதாரர்கள் ஏதேனும் கேள்விகளை எழுப்ப விரும்பினால், அத்தகைய கேள்விகளை நிறுவனத்தின் செயலாளர்கள், எக்கவுண்டிங் சிஸ்டம்ஸ் செக்ரடிறி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட், என்பனவற்றுக்கு ppeiris@deloitte.com என்ற முன்னுரிமை மின்னஞ்சல் மூலம் சந்திப்பு திகதிக்கு ஐந்து (05) நாட்களுக்கு குறையாமல் அனுப்ப வேண்டும் அல்லது +94112504008 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பலாம்.

பணிப்பாளர் சபையின் உத்தரவின் பேரில்
கண்டி ஹோட்டல்ஸ் கம்பனி (1938) பிஎல்சி
எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
செயலாளர்கள்
01/09/2022

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கிழக்கின் குரல்

பொத்துவிலில் மீண்டும் டெங்கு;

## டெங்கு நுளம்பு பரவக் கூடிய வெற்றுக் காணி உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

பொத்துவில் பிரதேசத்தில் மீண்டும் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய வெற்றுக் காணிகளை வைத்திருப்போர் ஒரு வார காலத்திற்குள் காணிகளை துப்பரவு செய்யுமாறு, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

தற்போது அடிக்கடி மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் தோன்றியுள்ளதால் பொது மக்கள் மிக அவதானமாக செயற்படுமாறு அறிவித்துள்ளார்.

டெங்கு நுளம்பு பரவாமல் தடுக்கும் பொருட்டு பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கொழிப்பு செயலணி மற்றும் பொலிஸார் ஆகியோர் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல், டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை துப்பரவு செய்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சுற்றுப்புறத்தில் தேங்கும் நீர் நிலைகளைக் கண்டறிந்து அவற்றை வெறுமைப்படுத்துதல் அல்லது நீர் தேங்கி உள்ள அத்தகைய இடங்களில் பூச்சிகொல்லி மருந்துகளைத் தெளித்தல், உயிரியற் கட்டுப்பாட்டுக் காரணிகளை இடல் போன்றன நுளம்புகளின் பெருக்கத்தைத் தடுக்கின்றது.

டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருப்பவர்கள் துப்பரவு செய்யுமாறும் அதனை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் மேலும் தெரிவித்தார்.



இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரியில் கடந்த 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் சித்தியடைந்த 189 மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் எம்.ஏ.எம் பஜீர் தலைமையில் கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற போது.. படம் : இறக்காமம் தினகரன் நிருபர்

## அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் 09 மாணவர்கள் வைத்தியபீடத்திற்கு தெரிவு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேற்றில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) இம்முறை சகல பிரிவுகளிலும் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் ஏ.பீ. எம்.முஜீன் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 20 மாணவர்களும், பௌதீக விஞ்ஞானப் பிரிவில் 20 மாணவர்களும், வணிகப் பிரிவில் 10 மாணவர்களும்,கலைப்பிரிவில் 04 மாணவர்களும், தொழில்நுட்பவியல் பிரிவில் 17 மாணவர்களுமாக மொத்தம் 71 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகம் செல்வதற்கான தகுதியினை பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இக்கல்லூரியிலிருந்து உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் தோற்றிய மாணவன் எம்.ஜே.எம்.அப்றி மாவட்டத்தில் நான்காவது இடத்தையும், பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் தோற்றிய மாணவன் எம்.ஏ.சுஜாத் மாவட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கும், அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர் என்று அதிபர் மேலும் தெரிவித்தார்.

## கஞ்சாவுடன் நான்கு பேர் கைது

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு இடங்களில் நான்கு பேர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசங்களுக்கு சென்ற பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து கஞ்சாவையும் கைப்பற்றினர். அக்கரைப்பற்று பாத்திமியா வீதியில் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 22,460 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது, மற்றைய நபர் அக்கரைப்பற்று மீராவோடையில் கைது செய்துள்ளதுடன் 3000 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் ஆலையடிவேம்பு அகத்திக் குளம் பிரதேசத்தில் 4000 மில்லி கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஒலுவில் பிரதேசத்தில் 49 மில்லி கிராம் கஞ்சாவுடன் இன்னுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்

அக்கரைப்பற்று பொலிஸார் இப்பிராந்தியத்தில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## கமு/திகோ/ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரியில் 37 மாணவர்கள் பல்கலைகழகம் தெரிவு

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளின்படி கமு/திகோ/ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரியில் ( தேசிய பாடசாலை) 37 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டதுடன் வலயத்தில் முதல் நிலையினை பிடித்துக் கொண்டது.

தெரிவான மாணவர்களில் கலைப்பிரிவில் ல.பிரேம்சனா 3 ஏ சித்தியினை பெற்று மாவட்டத்தில் முதல் நிலையினையும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மு.வைஷாலி 3 ஏ சித்தியினை பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாம் நிலையினை பெற்று மருத்துவ துறைக்கும் தெரிவாகியுள்ளார் என அதிபர் ஜே.ஆர்.டேவிட் அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

பரீட்சை பெறுபேறுகளின் படி திருக்கோவில் வலயத்தில் இராமகிருஷ்ணா கல்லூரியில் (தேசிய பாடசாலை) தொடர்ந்தும் முன்னணியில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**பல்கலைக்கழகம் செல்லவுள்ள மாணவர்கள்;**

விஞ்ஞானப் பிரிவில் 09 மாணவர்களும் வர்த்தகப் பிரிவில் 07 மாணவர்களும் தொழில்நுட்ப பிரிவில் 04 மாணவர்களும் கலைப் பிரிவில் 17 மாணவர்களும் என 37 மாணவர்கள் தெரிவாகி பல்கலைக்கழகம் செல்ல உறுதியாகியுள்ளது.

## காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் பல்கலை தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் 2021 கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவு மற்றும் கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற இரண்டு மாணவிகள் மற்றும் அப்பாடசாலையிலிருந்து பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகள் (31) புதன்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.

2021 கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் இப்பாடசாலை மாணவி எம்.ஆர். பாத்திமா பஸ்னா, கலைப்பிரிவில் எஸ்.பாத்திமா ஷம்லா ஆகிய இரண்டு மாணவிகளும் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டனர்.

அதே போன்று இப்பாடசாலையிலிருந்து மருத்துவ பீடத்திற்கு 5 மாணவிகளும் உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் 12 மாணவிகளும் பௌதீக விஞ்ஞானப்பிரிவில் 3 மாணவிகளும், வர்த்தகப் பிரிவில் 23 மாணவிகளும் கலைப் பிரிவில் 18 மாணவிகளுமாக 61 மாணவிகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பாண்டிருப்பில் நூறுநாள் உரிமை போராட்டம்

**காரைதீவு குறூப் நிருபர்**

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற நூறு நாட்கள் செயல்முனைவின் ஓரங்கமாக நேற்று (31) புதன்கிழமை கொட்டும் மழைக்கு மத்தியில் கல்முனை பாண்டிருப்பில் நூறுநாள் உரிமை போராட்டம் நடைபெற்றது.

இதன் கருப்பொருள் 'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' என்பதாகும்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலுக்கு பவனியாக வருகை தந்த மக்கள் கோஷங்களை எழுப்பினர்.

1.நாங்கள் நாட்டை துண்டாக்கவோ தனியரசு கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம் .

2,வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் .

3,13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகார பரவலாக்கலுக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது. அத்தோடு காலாகாலமாக சிங்கள தலைமைத்துவங்கள் பல்வகையான ஒப்பந்தங்களை தமிழ் தலைமைத்துவங்களோடு செய்து கொண்டாலும் இன்றுவரை அவை எங்களுடைய மக்களுக்கு எட்டாக்கனியாகவே உள்ளது .

அந்த அடிப்படையில், மக்கள் ஒன்றிணைந்து தங்களுக்கான வாழ்வியல் உரிமையை கேட்கின்ற நிகழ்வாக இந்த நிகழ்வு நூறு நாள் செயல்முனைவின் 32 நாளான நேற்று அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றது .

## நிந்தவூர் வீதி விபத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவி மரணம்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

நிந்தவூர் பிரதான வீதியில் துரைமூலை என்னும் இடத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவி தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது வாகனத்தில் மோதுண்டு நேற்று காலை ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

காத்தான்குடி5, மீராப்பள்ளி வீதியைச் சேர்ந்த 23 வயது அக்பர் அலி பாத்திமா அஸ்பா என்ற மாணவியே மரணமானவராவார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட விடுதி மாணவியான இவர் இரண்டாவது பருவகால அமர்வின் பொருட்டு தனது கணவருடன் காத்தான்குடியிலிருந்து நேற்று காலை 6.00 மணியளவில் புறப்பட்டு நிந்தவூரினூடாக பல்கலைக்கழகத்திற்கு பயணித்துக் கொண்டிருந்தபோதே வாகனத்தில் மோதுண்டு காலமானார்.

விபத்து தொடர்பில் சம்மாந்துறை பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இம்மாணவி திருமணமாகி மூன்று மாதங்களே ஆன நிலையில் இப்பரிதாப மரணம் சம்பவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி மாணவன் தமிழ்வண்ணன்துவாரகேஸ் மற்றும் பாடசாலையில் உயர்தரத்தில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. தமிழ்வண்ணன்துவாரகேஸ் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதல் இடம்பெற்றவர்.நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை மற்றும் பாடசாலை ஆசிரியர்கள்,பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்,அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள்,பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். படம் வெல்லாவெளி தினகரன் நிருபர்

## மிளகாய் செய்கையில் ஒருவித வாடல்நோய் - விவசாயிகள் பாதிப்பு

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மிளகாய் செய்கையில் ஒருவித வாடல் நோய் பரவுவதனால் விவசாயிகள் மிகவும் நஷ்டத்தை எதிர்கொண்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளைப் பிரதேசத்தில் மிளகாய் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் பரம்பரை பரம்பரையாக மேட்டு நிலத்தில் மிளகாய், கத்தரி, வெண்டி, பயற்றை, வெங்காயம், உள்ளிட்ட பயிர் செய்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்நிலையில் இம்முறை மேற்கொண்டுள்ள மிளகாய் செய்கையில் ஒருவித வாடல் நோய் காரணமாக மிளகாய் செடிகள் நன்கு பூத்து காய்க்கும் நிலைக்கு வரும் வேளையில் திடீரென வாடிப் போய்இறந்துவிடுகின்றன.இதனால் தாம் பெரும் நட்டத்தை எதிர்கொண்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிடுகின்றன.



எனினும் மிளகாய் செய்கை இடைநடுவில் கைவிடப்படுவதனால் மரவள்ளி போன்ற மாற்றுப் பயிர்களை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். அதிக உஷ்ணம் காரணமாகவும் மற்றும் பங்கஸ் தாக்கத்தினாலும், மிளகாய் செடிக்கு இந்த நோய் வருகின்றது என விவசாயப் போதனாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

## கிளிவெட்டி மகா வித்தியாலயம் மாவட்ட ரீதியில் முதலாமிடம்

**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் தி/மூ/கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவி அருள்ராசா சனுஜா கலைப் பிரிவில் திருகோணமலை மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்று மூதூர் வலயத்திற்கும் பாடசாலைக்கும் பாரதிபுரம் கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இப் பாடசாலையில் முதல் முறையாக மாவட்ட ரீதியில் இவர் முதலிடம் பெற்றதையிட்டு அனைவரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். தமிழ், புவியியல் மற்றும் கர்நாடக சங்கீதம் ஆகிய பாடங்களில் இம் மாணவி A சித்தி பெற்றுள்ளார்.

இவர் அருள்ராசா, அருள்ராசா கௌரி தம்பதிகளின் அன்புப் புதல்வி என்பதும் குறிப்பிடத்தக்கது.



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# புத்தளம் வெட்டாளை அஸன் குத்தூஸ் முஸ்லிம் வித்தியாலயத்தின் பொன் விழா

## ஒரு வரலாற்று பார்வை







இயற்கையின் அருட்கொடைகளான குறிஞ்சி, முள்ளை, மருதம், பாலை, நெய்தல் என ஐம்பெரும் வழங்களையும் ஒருங்கே பெற்ற புத்தளம் நகரத்தின் வடமேற்கே அழகிய கலப்புக்கும், உப்பு வயலுக்கும் நடுவே அமையப்பெற்றதே எமது கலாசாலையாகும்.

பொருளாதாரம், கல்வி, கலை கலாசாரம் என அனைத்திலுமே பின்தங்கிக் காணப்பட்ட இப்பிரதேசத்தின் வளர்ச்சியானது தனியான பாடசாலையொன்று தோற்றம் பெறுவதினால் மாத்திரமே சாத்தியமாக்கலாம் என்று உதித்த சிந்தனையின் அடிப்படையில் சில உலமாக்களும், ஆசான்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான அஸன் குத்தூஸின் மகனான மர்ஹூம் ஏ.ஏ. லத்தீபிடம் பாடசாலைக்கான கோரிக்கையை முன்வைத்தனர். இக்கோரிக்கையை அன்றைய கல்வி அமைச்சரான கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்திடம் எடுத்துச் சென்று அப்துல் லத்தீப் இறைவனின் உதவியுடன் இப்பாடசாலையைப் பெற்றுக்கொடுத்தார். அத்தோடு இப்பாடசாலைக்கு மர்ஹூம் லத்திபின் தந்தையான புத்தளம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் அஸன் குத்தூஸின் பெயரும் சூட்டப்பட்டது. அதற்கேற்ப அஸன் குத்தூஸ் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரில் அன்றைய கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத்தினால் இப்பாடசாலை 1972.09.01 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

ஒரு ஓலைக்கட்டிடத்தில் இரண்டு ஆசிரியர்களுடனும் 69 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் முதலாவது அதிபராக எம். எச். சேகுலாப்தீன் என்பவர் கடமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். பாடசாலைக்குரிய தளபாடங்கள் சாஹிரா மத்திய கல்லூரியிலிருந்து பெறப்பட்டதாக சம்பவத்திரட்டு புத்தகத்திலிருந்து அறியத் முடிகின்றது. இப்பாடசாலையில் சேர்க்கப்பட்ட முதல் மாணவியாக ஏ.ஆர் சித்தி நபீலா விளங்குகிறார்.

அதிபர் சேகுலாப்தீன் எம்.ஏ.எம். செல்ல மரிக்காரிடம் 1973.01.01 அன்று பாடசாலையின் பொறுப்புக்களை ஒப்படைத்ததைத் தொடர்ந்து இப்பாடசாலையின் இரண்டாவது அதிபராக எம்.ஏ.எம். செல்ல மரிக்கார் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1973.02.01 இல் எம்.ரி உவைஸ் அதிபர் பொறுப்பை ஏற்றார். 1973.02.13 ஆம் திகதி மீணடும் எம்.ஏ.எம். செல்ல மரிக்கார் அதிபர் பொறுப்பை ஏற்றார். 1978.01.19 ஆம் திகதி கே.எஸ்.எம்.எம். இபுனு அதிபராகக் கடமை ஏற்றுக் கொண்டார். இவருடைய காலத்தில் 06 ஆசிரியர்கள் கடமையாற்றியுள்ளனர். இக்காலத்தில் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 209 ஆக இருந்துள்ளது. 1987.07.01 ஆம் திகதி எம். எச். ஹுஸைர் இப்பாடசாலையின் அதிபரானார். இவரே இப்பாடசாலையின் மிக நீண்ட காலமாக அதிபராக சேவையாற்றியுள்ளார். இக்காலப் பகுதியில் 5ம் தரம் வரை இருந்த இப்பாடசாலை 10ஆம் தரம் வரை தரமுயர்த்தப்பட்டது. 2002.07.09 ஆம் திகதி எம்.எச்.எம். ஹுஸைர் ஓய்வு பெற்றதையடுத்து எம்.ஐ.ஏ ரவுப் இப்பாடசாலையின் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். இதனை தொடர்ந்து 2003 இல் இப்பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரம் ஆரம்பிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் 02 மாணவர்கள் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இக்காலப்பகுதியில் உலக வங்கியின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மாகாண சபை அமைச்சருமான எம்.எச்.எம். நவவியினால் இப்பாடசாலைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டதாகும். எமது மண்ணின் மற்றொரு முத்தாக விளங்கும் முன்னாள் பிரதிய மைச்சரும் நகரபிதாவுமாகிய மர்ஹூம் கே.ஏ. பாயிஸினால் அன்றைய புனர்வாழ்வு, புனரமைப்பு, துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகருமான மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரஃபினாலும் நகரபிதாவினாலும் 02 கட்டிடங்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



அதிபர் ஏ.ஜே.எம். இல்ஹாம்

அதிபர் எம்.ஐ.ஏ ரவுப் இடமாற்றம் பெற்று சென்றதையடுத்து 2004.07.06ஆம் திகதி 8ஆவது அதிபராக எம்.யூ.எம். எஹ்யா பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். இக்காலப் பகுதியில் விளையாட்டு போட்டி, கலை கலாசார நிகழ்ச்சிகளிலும் மாணவர்கள் பங்குபற்றி வெற்றியீட்டி பாடசாலையின் முன்னேற்றத்திற்கு வித்தூன்ற தொடங்கிய காலப்பகுதியாகும். எம்.யூ.எம். எஹியா இடமாற்றம் பெற்று சென்றதையடுத்து 2005.07.02 ஆம் திகதி எஸ்.ஐ.எம். சித்தீக் இப்பாடசாலையின் 9 ஆவது அதிபராக கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். அவரது காலப்பகுதியிலும் இப்பாடசாலை படிப்படியாக அபிவிருத்தியை நோக்கி நகர்ந்தது. 2009.03.23 எஸ். ஐ.எம். சித்தீக் ஓய்வுபெற்றதை தொடர்ந்து ஏ.எம். ஜவாத் 2009.03.23 ஆம் திகதி இப்பாடசாலையின 10ஆவது அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இக்காலப்பகுதியில் பாடசாலைக்கு பல பௌதீக வளங்கள் கிடைக்கப்பெற்றன. இக்காலப் பகுதியிலேயே பாடசாலையின் வரலாற்றில் முதன் முறையாக 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் எம். ரியோஸ் என்ற மாணவர் சித்தியடைந்தார். இது குறிப்பிடத்தக்க விடயமாகும். அதிபர் ஏ.எம். ஜவாத்தின் இடமாற்றத்தின் பின்னர் 2012.01.02 ஆம் திகதி எம்.ஐ மின்ஹார் 11ஆவது அதிபராக கடமைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். அதன் பின் 2012.02.17ஆம் திகதி ஏம்.ஐ. எம். ரவூப் மீண்டும் அதிபராக கடமையேற்றுக் கொண்டர்ர. 2013.07.25ஆம் திகதி எம்.ஐ.ஏ ரவூப் ஓய்வு பெற்றதை அடுத்து 2013.07.26 ஆம் திகதி சனூன் மரைக்கார் இப்பாடசாலையின் 13 வது அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது மரணத்தை அடுத்து திருமதி எஸ்.வி ஜுனைதீன் 14வது அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். 2014.12.11ஆம் திகதி எச்.ஏ ஜப்பார் இப்பாடசாலையின் 15வது அதிபராக கடமையேற்றுக் கொண்டார். இவரது தலைமையில் இப்பாடசாலை வீறுநடை போடத் தொடங்கியது. அதிபர் மற்றும் முகாமைத்துவ குழுவின் முயற்சியின் பலனாக இப்பாடசாலைக்கு பல பௌதீக வளங்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் 215 அடிகள் நீளமான சுற்றுமதில் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். எச்.ஏ. ஜப்பாரின் இடமாற்றத்தை தொடர்ந்து 2018.01.08 ஆம் திகதி திருமதி ஏ.ஆர்.எஸ். பாயிஸா இப்பாடசாலையின் 16வது அதிபராக கடமையேற்றுக் கொண்டார். 2018.02.01ஆம் திகதி என்.எம். அப்துல் ரஹீம் இப்பாடசாலையின் 17ஆவது அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது காலப்பகுதியிலும் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையிலும் 02 மாணவர்கள் சிந்தியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

2020.02.16ஆம் திகதி என்.எம். அப்துல் ரஹீமின் இடமாற்றத்தை அடுத்து 2020.02.16 ஆம் திகதி ஏ.ஜே.எம். இல்ஹாம் இப்பாடசாலையின் 18வது அதிபராக கடமையேற்றுக் கொண்டார். இளமைத்துடிப்பும் புத்தாக்க சிந்தனையும், அனைவரோடும் ஒன்றினைந்து செயற்படும் ஆற்றலைக் கொண்ட அதிபர் ஏ.ஜே.எம். இல்ஹாம், பு/பாலாவி முஸ்லிம் வித்தியாலய முன்னாள் அதிபரும் தற்போதைய எமது பாடசாலை பிரதி அதிபருமான எம்.எஸ்.எம். மொஹிதீனின் பூரண அனுபவ ஆற்றல்களுடன் பாடசாலை முகாமைத்துவ குழு, ஆசிரியர்கள், முன்னாள் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அதன் மூலம் பெறப்பட்ட பகுப்பாய்வினூடாக சகலரது ஒத்துழைப்புக்களுடன் பல புதிய செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

பாடசாலையை மாணவ மாணவியர் மனங்கவர் பாடசாலையாகவும் இப்பிரதேசம் வேண்டி நிற்கின்ற நற்பிரஜைகளை உருவாக்கும் பாடசாலையுமாகவும் வடமேல் மாகாணத்தில் முன்னணி பாடசாலையாகவும் அஸன் குத்தூஸ் வித்தியாலயத்தைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்து தரப்பினரதும் ஆதரவு ஒத்துழைப்புடன் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் பயனாக பயனாக இப்பாடசாலை வெற்றிப்பாதையில் வீறுநடை போடுகிறது. தற்போது 30 ஆசிரியர்களும் 03 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 05 தொண்டர் ஆசிரியர்களும் சுமார் 725 மாணவர்களையும் கொண்டுள்ள இப்பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 11 வரையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இப்பாடசாலையானது தொடர்ந்து பல்வேறு வெற்றிப்படிகளை தாண்டி புத்தளத்தினதும் வடமேல் மாகாணத்தினதும் முன்னணி பாடசாலையாக திகழவும் இந்த சமூகம் வேண்டி நிற்கின்ற நற்பிரஜைகளை உருவாக்கும் பாடசாலையாகவும் திகழ இப் பொன்விழா கொண்டாட்டத்தின் நிமித்தம் இறைவனை பிரார்த்திக்கிறோம்.

தொகுப்பாளர்.
முன்னாள் ஆசிரியை
திருமதி ஏ. நஸீரா தாஹிர் ...





பாடசாலை முகாமைத்துவக்குழு



அதிபரும் ஆசிரியர் குழாமும்







## பொன் விழா காணும் வித்தியாலய அபிவிருத்திக்கு தொடர்ந்து உதவுவோம்

### நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக்



50வது அகவையில் தடம் பதித்து பொன்விழாவைக் கொண்டாடும் எமது புத்தளத்தின் பழைமை வாய்ந்த கல்வி தாய்களில் ஒன்றான வெட்டாளை அசன் குத்தூஸ் வித்தியாலயத்திற்கு எனது இதயபூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதோடு இவ்வித்தியாலயத்தின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் நாமும் எமது நகர சபையும் தொடர்ந்தும் உதவி ஒத்துழைப்புகளை நல்குவோம் என்று புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

கல்வியில் பின் தங்கியிருந்த எமது சமூகத்துக்குக் கிடைக்கப்பெற்ற பெரும் பொக்கிஷமாகவே அஸன் குத்தூஸ் பாடசாலை திகழ்கிறது. ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பாடசாலையின் பங்களிப்பு மிக முக்கிய காரணியாக விளங்குகிறது.

அந்த வகையில் அஸன் குத்தூஸ் வித்தியாலயம் மகத்தான பங்களிப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். பல அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ள இப்பாடசாலை பொன்விழாவை இப்போது கொண்டாடுகிறது. இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க சந்தர்ப்பத்தில் இப்பாடசாலையின் தற்போதைய அதிபராக ஏ.ஜே.எம் இல்ஹாம் கடமையாற்றுவது பெரும் வரப்பிரசாதமாகும். இப்பாடசாலையின் அபிவிருத்தி விடயங்களில் எனதும், சக நகரசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட எமது நகர சபையினதும் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் தொடர்ந்தும் நிலைபெற்றிருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்' எனவும் நகர பிதா எம்.எஸ்.எம் ரபீக் இவ்வித்தியாலயத்தின் பொன்விழாவின் நிமித்தம் குறிப்பிட்டுள்ளார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# வவுனியாவில் இதுவரை 4 காட்டு யானைகள் உயிரிழப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா மாவட்டத்தில் கடந்த 8 மாதங்களில் மாத்திரம் நான்கு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் காடாழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையால், காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைவதோடு, மக்களின் வாழ்வாதாரங்களும் பாதிக்கப்படுகின்றன.

இந்நிலையில், இப்பகுதியிலுள்ள மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வருடம் 8 மாதங்களில் 4 யானைகள் மாத்திரம் உயிரிழந்துள்ளன.

அதேவேளை கடந்த வருடத்தில் 10 யானைகள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் விவசாய நிலங்களை ஆக்கிரமிக்கும் பார்த்தீனியம் களை

**ஓமந்தை விஷேட நிருபர்**



வவுனியாவில் பல பகுதிகளை பார்த்தீனியம் களை ஆக்கிரமித்துள்ளது. குறிப்பாக நகர் பகுதிகள், வீதியோரங்கள், புகையிரத பாதைகளுக்கு அருகில், விவசாய நிலங்கள் என பல இடங்களில் பார்த்தீனியம் களை ஆக்கிரமித்துள்ளன.

விவசாயத்துறைக்கு அதிகளவில் கேடு விளைவிக்கும் தாவரமாக பார்த்தீனியம் காணப்படுகின்றது. விவசாயப் பயிர்களை அழித்து ஆக்கிரமித்து வளரக்கூடிய தன்மையுள்ளமையால், இந்த களை பரவும் இடத்தில் பயிர்செய்கை பண்ணமுடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டனர்.

இதேவேளை பார்த்தீனியக்களை பரவுவதை தடுப்பதற்கு கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அச்செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படாமையினால் தற்போது இந்நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## சிறு விளம்பரம்



## வேலைவாய்ப்பு



314

**வெற்றிடங்கள்**

**கட்டிட நிர்மாண வேலைகள்**

வேலை வாய்ப்பு மேசன் 3 0 00/ =, பெய்ன்ட் 2 5 00 + 30 00/ =, டைவில் வேலை 3 0 0 0 + 3500/ =, கை உ தவி ஆ ளுக்கான 2000/ =. 0 778692314.

050275





## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. 3/2/3/10/272 (750)

காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/7/2019/ஏச்டபிள்யு/115

**கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 16.03.2022 ஆம் திகதிய 2271/31 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி (111) ஐப் பார்க்கவும்.**

**அட்டவணை**

மாகாணம் : மேல்

மாவட்டம் : கம்பஹா

பிரதேச செயலாளர் பிரிவு : அத்தனகலை

| கடஸ்ரல் வரைபட இல. | துண்டு இல. | விஸ்தீரணம் ஹெக்டயார் | கிராமம் | கிராம சேவகர் பிரிவு |
|---|---|---|---|---|
| 510602 (3/7) | 09 | 0.2722 | வீதகம | வீதகம |
| 510602 (1/6) | 10 | 0.0581 | வீதகம | வீதகம |
| 510602 (3/7) | 06 | 0.025 | வீதகம | வீதகம |
| 510602 (5/6) | 08 | 0.0648 | வீதகம | வீதகம |
| 510602 (2/5) | 24 | 0.1216 | வீதகம | வீதகம |
| 510602 (6/5) | 02 | 0.0032 | வீதகம | வீதகம |
| 510602 (3/5) | 02 | 0.0094 | வீதகம | வீதகம |
| 510602 (3/6) | 01 | 0.0079 | வீதகம | வீதகம |
| 510602 (3/1) | 01 | 0.0480 | வீதகம | வீதகம |
| 510605 (1/14) | 31 | 0.2076 | நவகமுவ | நவகமுவ |
| 510600 (4/11) | 19 | 0.1535 | கலால்பிட்டிய | கலால்பிட்டிய |
| 510600 (3/8) | 29 | 0.2411 | கலால்பிட்டிய | கலால்பிட்டிய |

**எஸ்.பீ.குணவர்த்தன,**
**பிரதேச செயலாளர்,**
**அத்தனகலை.**

**பிரதேச செயலகம்,**
**அத்தனகலை.**
**29.08.2022**

## மாநகரசபை - குருணாகல்

## அறிவித்தல்

**2022 ஆம் ஆண்டிற்கான துணை வரவுசெலவுத்திட்ட அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான அறிவிப்பு.**

**2022 ஆம் ஆண்டின் துணை வரவு செலவுத் திட்டம் எண். 02**

மாநகரசபை சட்டம் 214 (ஆ) பிரிவின் படி 2022 ஆண்டு எண் 02 இல் காணப்படும் வரவு செலவுத் திட்டத்தின் கீழ், பின்வரும் வருமானம் மற்றும் செலவுகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய மத்திய சந்தை கட்டம் I, II மற்றும் மேலதிக பணிகளுக்கான செலவுகளுக்கு **ரூ.472.5 மில்லியன் ஒதுக்கீடு** செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (இதற்காக புதிய மத்திய சந்தை வீட்டு வளாகத்தின் வருமானமாக **ரூ.1155.4 மில்லியன்** ஒதக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில் **2021** ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் **ரூ.273 மில்லியன்** மற்றும் **2022** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் **ரூ.409.5 மில்லியன்** என மதிப்பிடப்பட்ட வருமானத்தைக் கழித்த பின்னர் மீதமுள்ள வருமானத்தைப் பயன்படுத்த எதிர்பார்கப்படுகின்றது.)

அரச உத்தியோகத்தர்களுக்காக **03/2022** சுற்றறிக்கையின் படி **ரூ.5000.00** கொடுப்பனவுக்காக **ரூ.35,580,000.00** ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக **2022 ஜனவரி மாதம்** முதல் **டிசம்பர்** வரை **ரூ.5000.00** கொடுப்பனவுக்காக் வடமேல் மாகாண சபையினால் உதவித்தொகை நிதியானது கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.)

இதற்காக குருநாகல் மாநகரசபையின் பொதுமக்களின் முன்மொழிவுகள் அல்லது பரிந்துரைகளை **2022 செப்டெம்பர் மாதம் 14** ஆம் திகதிக்கு முன்னர் **"நகராட்சி ஆணையாளர், மாநகர சபை, குருநாகல்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக கையளிக்கவும். முன்மொழிவுகளை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2022 துணை வரவு செலவு திட்டம் 02 க்கான முன்மொழிவுகள்"** எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**துஷார சன்ஜீவ வித்தாரண**
**மாநகராட்சித் தலைவர்**
**மாநகர சபை, குருநாகல்.**
**2022/09/01**

## இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/PT/6367(MP) | 60 Nos. Twist Lock Assemblies for RAM Spreaders Fitted to STS / RTG Cranes at JCT | 85,000.00 | 1,000.00 | 29-09-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6369(MP) | Spares of Stinis Twin Lift Telescopic Spreader | 32,000.00 | 1,000.00 | 29-09-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/16/015 | Restoration of Crane Monitoring System of Transfer Cranes at JCT | 250,000.00 | 3,500.00 | 22-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/08/022 | 02 Nos. 20KVA Online UPS Units | 40,000.00 | 1,000.00 | 22-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/14/054 | 50 Nos. Semi – Maintenance Batteries 12V 150 AMPH | 18,000.00 | 1,000.00 | 22-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/17/052 | 04 Nos. Mobile Crane Tubeless Tyres 1800 X 25 32 PLY | 55,000.00 | 1,000.00 | 22-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/19/PT/17/059 | 1100 Mtrs. Cloth Drill | 18,000.00 | 1,000.00 | 23-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/04/056 | Shirts Short / Long Sleeves – 2500 Nos. | 25,000.00 | 1,000.00 | 23-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/07/053 | 5040 Liter of Transfluid Oil P-157 | 30,000.00 | 1,000.00 | 23-09-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 செப்டெம்பர் 02ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிரதேச சபை சம்மாந்துறை உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத்திட்டத்தின் கீழான செயற்றிறன் ஒதுக்கீடு

## Supplying and fixing solar power system for office Administrative

Building at Vilinayadi-03 Contract Number:
LDSP/EP/AM/STR/PS/PT-01/2022/02

01. உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு Supplying and fixing solar power system for office administrative building at viliniyadi-03 ஒப்பந்தத்தில் கீழுள்ள கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியினை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சேவை பணிக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து சம்மாந்துறை பிரதேச சபையின் சார்பில் உள்ளூர் நிர்வாக பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
03. தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடைபெறும்.
04. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் சம்மாந்துறை பிரதேச சபை பெறுகைக்குழு தலைவரிடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் (தொ.இல/தொ.நகல் 0672260043/0672260235) (மின்னஞ்சல் - strps2009@yahoo.com) என்பதோடு 2022 செப்டம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் 2022 செப்டம்பர் 21 வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை எந்தவொரு வேலை நாட்களிலும் இதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
05. தகைமைத் தேவைகள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 5 இல் வழங்கப்பட்டுள்ளது.
06. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் நிதி அமைச்சு அல்லது உலக வங்கி அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் தடுப்புப்பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு உள்நாட்டு ஒப்பந்ததாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக கட்டட கட்டுமானத் துறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
07. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவினை செலுத்தி 01 செப்டம்பா 2022 முதல் 2022 செப்டம்பர் 21 வரை வேலை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரை சம்மாந்துறை பிரதேச சபையின் தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றினை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
08. விலைமனுக்களை 21 செப்டம்பர் 2022 அன்று 15.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு அசல் மற்றும் நகல் பிரதிகளில் தயாரித்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்றபின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் கீழுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனு பிணை ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்
09. விலைமனுவிற்கு முந்தைய கூட்டம் 12 செப்டம்பர் 2022 அன்று 11.00 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையில் நடைபெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் விலைமனுவிற்கு முந்தைய கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.
10. ஒப்பந்தம் வழங்கப்படுவதில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது
11. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன் எந்த நேரத்திலும் இந்த பெறுகையை இரத்துச் செய்ய அல்லது மீளப்பெற தொழில் வழங்குநருக்கு உரிமை உள்ளது

| Contract No | Description of Works | Tender able Amount (Mn) | Contract Period | Required Grade | Bid Validity Period | Required Bid Security | | Bid Validity Period up to |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Bid Security Amount | Validity Period | |
| LDSP/EP/AM/STR/PS/PT-01/2022/02 | Supplying and fixing solar power system for office Administrative Building at Vilinayadi-03 | 4.400Mn | 90 calendar days | EM4 Electrical Installation | 63 days | 53,000.00 | 22.12.2022 | 23.11.2022 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு, பிரதேசசபை,**
**சம்மாந்துறை.**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# மன்னார் மாவட்டத்தில் க.பொ.த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறு






மன்னார் மாவட்டத்தில் க.பொ.த உயர்தர பரீட்சையில் உயிரியல் பிரிவு மற்றும் வணிக பிரிவுகளில் முதலிடத்தை மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவிகளும், பௌதீக விஞ்ஞானம் மற்றும் கலைப்பிரிவில் முதலாம் இடத்தை மன்/சித்திவிநாயகர் பாடசாலை மாணவர்களும், உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவில் மன்/அஸ்ஹர் தேசிய பாடசாலை மாணவியும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மன்னார் எமில் நகர் பகுதியை சேர்ந்த மாணவி அபினா அமலதாசன் உயிரியல் பிரிவில் 2 ஏ B, சித்திகளை பெற்று மன்னார் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

அதேநேரம் தினகரன் ஜனுசா 3 ஏ சித்திகளை பெற்று வணிக பிரிவில் மாவட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ளார்.

மேலும் மன்/சித்திவிநாயகர் இந்து கல்லூரியை சேர்ந்த மாணவர்கள் உயர்தர பரீட்சையின் பெறுபேறின் அடிப்படையில் சிவபாலன் யுதர்சன் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியாக பௌதீக விஞ்ஞான பிரிவில் முதல் இடத்தையும் , நிலாமதி அன்ரனி 3 ஏ சில்வஸ்டர் சித்திகளைப் பெற்று கலைப்பிரிவில் முதலாம் இடத்தையும் , நகுலராஜா கதுஷன் 3 ஏ சித்திகளைப் பெற்று வணிகப்பிரிவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் மன்/அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை மாணவி மொஹமட் பாருக் பாத்திமா வாஸ்மியா உயிர் முறைமையியல் தொழில்நுட்பம் பாடத்தில் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.


**மாநகரசபை - குருணாகல்**

## பெறுகைக்கான அறிவித்தல்

**குருநாகல் மாநகரசபைக்கு சொந்தமான ஒன்பது மாடிகளைக் கொண்ட புதிய மத்திய சந்தை கட்டுமானத் செயற்திட்டற்தின் கீழ் கட்டப்படும் 24 வீட்டுப் பிரிவுகள் மற்றும் கடைகளை விற்பனை செய்வதற்கு பொருத்தமான சந்தைப்படுத்தல் முகவர் நிலையம் ஒன்றை தெரிவு செய்வதற்கான விலைமனுக்கோரல்**

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேசிய போட்டிமுறையிலான மனுக்கோரலுக்கு குருணாகல் மாநகரசபையின் நகராட்சி மன்றத்தின் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வார நாட்களில் அலுவலக நேரங்களில் கொள்முதலுக்கான ஆவணங்கள் ஆய்வு செய்யப்படும். மேலே குறிப்பிட்டுள்ள மனு ஆவணங்களை **2022.09.01 ஆம் திகதி முதல் 2022.09.27 ஆம் திகதி பி.ப.2.00** மணி வரை அலுவலக நேரங்களில் குருணாகல் மாநகரசபையின் நிதிப்பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். **2022.09.28 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு **நகராட்சி மன்றக் குழுவின் கூட்டம் நடைபெறும் அரங்கில்** மனுக்கள் திறக்கப்படும், மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கலாம். மனு ஆவணங்களுடன் ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

- மனுப் பாதுகாப்பு ரூ.10,000.00 (மீள்ச்செலுத்தப்படும் கட்டணம்)
- மனு ஆவணக்கட்டணம் 12% VAT வரி உட்பட ரூ.2,240.00

தொலைபேசி: 037-4941869
தொலைநகல்: 037 2228136
மின்னஞ்சல் : ginumviyadam@gmail.com

**நகராட்சி ஆணையாளர்**
மாநகர சபை,
குருநாகல்.



# கேள்வி கோரல்

## சுகாதார அமைச்சு

## அரசாங்க வைத்தியசாலைகளில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் - 2022/2023

சுகாதார அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழு "$C_2$" தலைவரினால் 2022/2023ஆம் ஆண்டிற்காக கீழ்க் காணும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்யும் சேவையை தொடர்ந்து நடாத்திக் கொண்டு செல்லக் கூடிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

01. இதன்பொருட்டு ஆர்வம் காட்டும் தரப்பினர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியசாலைகளுக்கு இலங்கை வங்கி - தப்ரபேன் கிளையில் பேணப்படும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 7040244 எனும் கணக்கிலக்கத்திற்கு மீளச் செலுத்தப்படாத கீழே அட்டவணையில் அந்தந்த வைத்தியசாலைக்கு உரித்துடையதாக குறிப்பிட்டிருக்கும் தொகையை கேள்வி ஆவணக் கட்டணமாகச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்து மூல வேண்டுகோள், தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-09-01ஆம் திகதி தொடக்கம் 2022-09-21ஆம் திகதி வரை பொதுவான அலுவலக நாட்களில் மு.ப. 9.30 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரையான காலப் பகுதியில் சுகாதார அமைச்சின் பெறுகைப் பிரிவில் இருந்து பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வைத்தியசாலையின் பெயர் | கேள்வி இலக்கம் | சொத்துக்கள் சான்றிதழின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | கேள்வி ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | தேசிய இரத்த பரிமாற்ற நிலையம், நாரஹேன்பிட்ட | MH/PB/13/LAU/01/2022 | 150,000.00 | 7,800.00 | 1,000.00 |
| 2 | பொது வைத்தியசாலை, களுத்துறை | MH/PB/13/LAU/02/2022 | 500,000.00 | 23,700.00 | 1,000.00 |
| 3 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை- ராகம | MH/PB/13/LAU/03/2022 | 500,000.00 | 406,700.00 | 3,500.00 |
| 4 | வாத நோய் மற்றும் புனருத்தாபன வைத்தியசாலை – ராகம | MH/PB/13/LAU/04/2022 | 300,000.00 | 26,100.00 | 1,000.00 |
| 5 | முல்லேரியா - இலக்கம் II வைத்தியசாலை (தேசிய மனநல சுகாதார நிறுவனம்) | MH/PB/13/LAU/05/2022 | 300,000.00 | 19,600.00 | 1,000.00 |
| 6 | கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லேரியா | MH/PB/13/LAU/06/2022 | 300,000.00 | 70,700.00 | 1,000.00 |
| 7 | சுவாச நோய் தொடர்பான தேசிய வைத்தியசாலை- வெலிசரை | MH/PB/13/LAU/07/2022 | 500,000.00 | 59,400.00 | 1,000.00 |
| 8 | த சொய்சா பெண்கள் வைத்தியசாலை - கொழும்பு 08 | MH/PB/13/LAU/08/2022 | 500,000.00 | 67,700.00 | 1,000.00 |
| 9 | தேசிய மனநல சுகாதார நிலையம் - அங்கொடை, (முல்லேரியா தாதியர் பாடசாலை) | MH/PB/13/LAU/09/2022 | 500,000.00 | 101,600.00 | 3,500.00 |
| 10 | மாவட்ட வைத்தியசாலை - கந்தானை | MH/PB/13/LAU/10/2022 | 300,000.00 | 18,000.00 | 1,000.00 |
| 11 | காசல் வீதி மகளிர் வைத்தியசாலை | MH/PB/13/LAU/11/2022 | 500,000.00 | 365,800.00 | 3,500.00 |
| 12 | அபேக்ஷா வைத்தியசாலை – மஹரகம | MH/PB/13/LAU/12/2022 | 500,000.00 | 214,800.00 | 3,500.00 |
| 13 | இலங்கை தேசிய கண் வைத்தியசாலை - கொழும்பு-10 | MH/PB/13/LAU/13/2022 | 500,000.00 | 113,100.00 | 3,500.00 |
| 14 | தேசிய தொற்றுநோய் நிறுவனம் (ஐ.டி.எச்) அங்கொடை | MH/PB/13/LAU/14/2022 | 300,000.00 | 53,400.00 | 1,000.00 |
| 15 | கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில | MH/PB/13/LAU/15/2022 | 500,000.00 | 329,100.00 | 3,500.00 |
| 16 | றிஜ்வே அம்மையார் சிறுவர் வைத்தியசாலை (போதனா) - கொழும்பு 8 | MH/PB/13/LAU/16/2022 | 500,000.00 | 23,400.00 | 1,000.00 |
| 17 | காச நோய்க் கட்டுப்பாடு மற்றும் மார்பு நோய் தொடர்பான தேசிய நிகழ்ச்சித் திட்டம் (தேசிய சயரோக இரசாயன கூடம் - வெலிசரை) | MH/PB/13/LAU/17/2022 | 150,000.00 | 2,000.00 | 1,000.00 |
| 18 | குடும்ப சுகாதாரப் பணியகம் | MH/PB/13/LAU/18/2022 | 150,000.00 | 4,300.00 | 1,000.00 |
| 19 | வாய்ச் சுகாதார நிறுவனம், மஹரகம | MH/PB/13/LAU/19/2022 | 150,000.00 | 6,300.00 | 1,000.00 |
| 20 | இலங்கை தேசிய பல் வைத்தியசாலை (போதனா) - கொழும்பு 07 | MH/PB/13/LAU/20/2022 | 500,000.00 | 25,600.00 | 1,000.00 |
| 21 | விஜயகுமார ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ | MH/PB/13/LAU/21/2022 | 500,000.00 | 34,800.00 | 1,000.00 |
| 22 | பொது வைத்தியசாலை, சிலாபம் | MH/PB/13/LAU/22/2022 | 500,000.00 | 87,700.00 | 1,000.00 |
| 23 | சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர்களுக்கான (விசேட) வைத்தியசாலை பேராதனை | MH/PB/13/LAU/23/2022 | 500,000.00 | 27,900.00 | 1,000.00 |
| 24 | ஆதார வைத்தியசாலை, கம்பளை | MH/PB/13/LAU/24/2022 | 300,000.00 | 46,000.00 | 1,000.00 |
| 25 | பொது வைத்தியசாலை, கேகாலை | MH/PB/13/LAU/25/2022 | 500,000.00 | 138,000.00 | 3,500.00 |
| 26 | போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய, காலி | MH/PB/13/LAU/26/2022 | 500,000.00 | 296,500.00 | 3,500.00 |
| 27 | தாதியர் பாடசாலை, குருநாகல் | MH/PB/13/LAU/27/2022 | 150,000.00 | 2,000.00 | 1,000.00 |
| 28 | போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் | MH/PB/13/LAU/28/2022 | 500,000.00 | 72,000.00 | 1,000.00 |
| 29 | பொது வைத்தியசாலை – திருகோணமலை | MH/PB/13/LAU/29/2022 | 500,000.00 | 90,900.00 | 1,000.00 |
| 30 | பொது வைத்தியசாலை – பொலொன்னறுவை | MH/PB/13/LAU/30/2022 | 500,000.00 | 255,200.00 | 3,500.00 |
| 31 | மாவட்டப் பொது வைத்தியசாலை, மாத்தளை | MH/PB/13/LAU/31/2022 | 500,000.00 | 225,400.00 | 3,500.00 |
| 32 | ஆதார வைத்தியசாலை, கந்தளாய் | MH/PB/13/LAU/32/2022 | 300,000.00 | 45,500.00 | 1,000.00 |
| 33 | போதனா வைத்தியசாலை, மஹமோதர | MH/PB/13/LAU/33/2022 | 500,000.00 | 158,200.00 | 3,500.00 |
| 34 | போதனா வைத்தியசாலை, அநுராதபுரம் | MH/PB/13/LAU/34/2022 | 500,000.00 | 514,700.00 | 12,500.00 |
| 35 | மாவட்டப் பொது வைத்தியசாலை, மொனராகல | MH/PB/13/LAU/35/2022 | 500,000.00 | 79,100.00 | 1,000.00 |
| 36 | போதனா வைத்தியசாலை, குருநாகல் | MH/PB/13/LAU/36/2022 | 500,000.00 | 634,000.00 | 12,500.00 |
| 37 | பொது வைத்தியசாலை, பதுளை | MH/PB/13/LAU/37/2022 | 500,000.00 | 211,900.00 | 3,500.00 |
| 38 | பொது வைத்தியசாலை, இரத்தினபுரி | MH/PB/13/LAU/38/2022 | 500,000.00 | 81,600.00 | 1,000.00 |
| 39 | போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டி | MH/PB/13/LAU/39/2022 | 500,000.00 | 90,000.00 | 1,000.00 |
| 40 | மாவட்டப் பொது வைத்தியசாலை - நீர்கொழும்பு | MH/PB/13/LAU/40/2022 | 500,000.00 | 128,700.00 | 3,500.00 |
| 41 | மாவட்டப் பொது வைத்தியசாலை, நாவலப்பிட்டி | MH/PB/13/LAU/41/2022 | 500,000.00 | 28,000.00 | 1,000.00 |

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1211 — ரூ.1,851,540.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.268,017,950.00 — F 26 06 12 25 57 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 — பெக்ஸ்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

# ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI)

## கிளிநொச்சியிலுள்ள லங்கா சதொச கட்டிடத் தொகுதியை நீண்ட கால குத்தகைக்கு வழங்குதல்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச லிமிடெட்டின் உரிமையின் கீழுள்ள கிளிநொச்சி கட்டிடத் தொகுதியானது கண்டி - யாழ்ப்பாணம் (A9) பிரதான வீதியை முகப்பாகக் கொண்டு, நகர மத்தியில் (32 பேர்ச் காணியில்) நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதுடன் இது வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் கீழ் வருகிறது. திருமண மண்டபம் (வளிச்சீராக்கி சகிதம்), அறைகள் (வளிச்சீராக்கி சகிதம்), 250KVA மின்மாற்றி ஊடாக மூன்று நிலை மின்சார வழங்கல் உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய மினி அரங்க மண்டப வசதிகள், தனியான நீர் வழங்கல், கட்டிடத்தின் முன்னால் வாகனத் தரிப்பிட வசதிகள் மற்றும் கட்டிடத்தின் தரை தளத்தில் சுப்பர் மார்க்கட் வசதிகள் என்பவை உட்பட ஏனைய பல வசதிகளைக் கொண்டுள்ளது.

இந்தக் கட்டிடத்தை நீண்டகால குத்தகை உடன்படிக்கையின் கீழ் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து ஆர்வத்திற்கான வெளிப்பாடுகள் (EOI) இத்தால் கோரப்படுகின்றன.

**சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள்:**

1. நிறுவனத்தின் பெயர், முகவரி, தொலைநகல் இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பவற்றை உள்ளடக்கி கட்டிடத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஆர்வ வெளிப்பாட்டுக் கடிதம்
2. நிறுவனம் / தனிப்பட்ட வியாபாரத்தின் சுய விபரம்
3. வியாபாரப் பதிவு
4. முக்கிய வியாபார விபரங்கள்
5. ஒற்றை முகாமைத்துவத்தின் கீழ் ஒருங்கிணைந்த நிறுவனங்களின் தெளிவான செயல்விளக்கம்
6. குறைந்தபட்சம் அண்மைய 3 வருடங்களுக்கான நிதி நம்பகத்தன்மை இருக்க வேண்டும். (கட்டாய அளவுகோல்)

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் ஆர்வ வெளிப்பாடுகளை 2022-09-14ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், 04ஆம் தளம், இல. 492, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு-03, இலங்கை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

ஆர்வ வெளிப்பாட்டைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘கிளிநொச்சியிலுள்ள லங்கா சதொச லிமிடட் கட்டிடத் தொகுதியின் நீண்டகால குத்தகைக்காக ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI)’’ எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆர்வ வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல் 2022-09-14ஆம் திகதி பி.ப. 3.15 மணிக்கு முடிவுறுத்தப்படும். கிடைக்கப்பெற்ற ஆர்வ வெளிப்பாடுகள் சமுகம் தந்துள்ள விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் ஆர்வ வெளிப்பாடுகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்றதன் பின் உடன் திறக்கப்படும்.

ஒரு குறும்பட்டியல் இறுதியாக்கப்படும் என்பதுடன் நிதி முன்மொழிவு ‘‘தகுதி’’ நிறுவனங்கள் / தனி நபர்களிடமிருந்து கோரிக்கையின் மூலம் (RFP) மட்டுமே கோரப்படும்.

தெளிவுபடுத்தல்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரியைத் தொடர்புகொள்ளவும்.

உதவிச் செயலாளர் (நிர்வாகம்), வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு - 076 2566047

**செயலாளர்,**
**வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 492, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை,**
**கொழும்பு 03,**
**இலங்கை.**

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Manager front office
+94 112429341
Hotline 1949

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# காலி மஹமோதர போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையை நடைமுறைப்படுத்துவதற்கான கேள்வி கோரல்

**2022.10.01 முதல் 2023.09.30 வரை காலி, மஹமோதர போதனா வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை நடைமுறைப்படுத்துவதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

02. மீளளிக்கப்படாத ரூபா3,000/- இற்கான தொகையொன்று விண்ணப்பப்படிவக் கட்டணமாக அறவிடப்படும் 2022.09.05 முதல் 2022.09.22 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.00 வரை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன், தம் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து மஹமோதர போதனா வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. கேள்வி விண்ணப்பங்களை அடக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில், 2022/2023 ஆம் ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலை சேவையை வழங்கல் எனக் குறிப்பிட்டு, 2022.09.23 அன்று மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "தலைவர், பிராந்திய பெறுகைக்குழு போதனா வைத்தியசாலை, மஹமோதர - காலி" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது பணிப்பாளரின் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியும்.
04. கேள்வி ஆவணங்கள் 02 பிரதிகளாக மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியெனக் குறிப்பிட்டு தனித்தனி உறைகளில் சேர்த்து அவற்றை ஒருறையில் உள்ளிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. 2022.09.23 அன்று மு.ப.10.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகவே அவை திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
06. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்ட நபர்களுக்கு கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
07. கேள்வியை முழுமையாக அல்லது அதன் பகுதி ஒன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.
08. மேலதிக விபரங்களிற்காக மஹமோதர போதனா வைத்தியசாலையின் கணக்காளரை அழைக்கவும். 0912222261

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை**
**மஹமோதர - காலி**

## பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

# எரிபொருள் தாங்கிகளை விற்பனை செய்தல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கீழேயுள்ள தோட்டங்களுக்குச் சொந்தமான தற்போது பாவனைக்கு எடுக்கப்படாத எரிபொருள் தாங்கிகளை விற்பனை செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இவ் எரிபொருள் தாங்கிகள் கீழ்க்காணும் தோட்டங்களில் வைப்புச் செய்யப்பட்டிருப்பதுடன் குறித்த தோட்டங்களின் தோட்ட அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளப்படும் முன் அறிவித்தலின் பின்னர் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| தோட்டம் | தாங்கிகளின் எண்ணிக்கை | கொள்ளளவு | தொ.பே. இலக்கம் |
|---|---|---|---|
| அலகொல | 03 | 6900/ 9000 | 0815-634900 |
| ஓட்லேன்ட் | 02 | 6900 | 0665-679800 |
| ரங்கல | 01 | 6900 | 0815-634904 |
| கெலேபொக்க | 05 | 6900 | 0815-634911 |
| ஹுன்னஸ்கிரிய | 01 | 6900 | 0815-634910 |

பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2022.09.20 பி.ப. 1.00 இற்கு முன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

சகல விலைமனுக்களையும் தலைவர், பெறுகைக்குழு, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "எரிபொருள், தாங்கிகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கள்" என்று குறித்த தோட்டத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அன்றே (2022.09.20) கேள்வி திறத்தல் குழுவின் முன்னிலையில் திறக்கப்படுவதுடன், ஏதேனும் விலைமனுவை அல்லது விலைமனுவின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரம் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீரானியா வீதி,**
**கொழும்பு-12.**

# AGSTAR PLC ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவித்தல்

**(பதிவு இல.: PV1618 PB/PQ)**

அக்ஸ்டார் பிஎல்சியின் 20ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டமானது (AGM) மெய்நிகர் ஆண்டுப் பொதுக் கூட்டமாக நடத்துவதற்கு ஏற்பாடாகி இருப்பதோடு கொழும்பு பங்குச் சந்தையால் (CSE) வெளியிடப்பட்ட வழிகாட்டலுக்கு அமைவாக, இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரியவில் LOLC ஹோல்டிங்ஸ் பிஎல்சியை மையமாகக் கொண்டு 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதி பி.ப 2.00க்கு செவிப்புல கட்புல வடிவத்தில் நடைபெறவுள்ளதை இங்கு அறியத்தரப்படுகிறது.

சந்தையில் மட்டுப்படுத்தப்பட்ட காகிதமே கிடைக்கப்பெறுவதன் காரணமாக பங்குதாரர்களுக்கு ஆண்டு அறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதிகளை வழங்குவதற்கு முடியாதிருப்பதை நிறுவனம் பங்குதாரர்களுக்கு அறியத்தருகிறது.

கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) 04/2022 ஆம் இலக்க CSE சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட தேவைகளுடன் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் இணங்குவதற்காக பட்டியலிடுதல் விதிகளின் 7.5 (b) (i) விதியை தளர்த்துவதை நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபை கருத்தில் கொண்டு, 2022 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கான ஆண்டு அறிக்கையை பங்குதாரர்களின் பார்வைக்காக "நிதி – ஆண்டு அறிக்கைகள்" Financials Annual Reports என்ற தலைப்பின் கீழ் நிறுவன இணையதளம் (https://agstaragri.lk/) மற்றும் CSE இன் இணையதளத்தில் (https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=AGST.N0000) வெளியிடுவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எந்த ஒரு விசாரணைக்கும் பங்குதாரர்கள் அக்ஸ்டார் பிஎல்சியின் நிறுவன செயலக பிரிவில் எந்த ஒரு வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) தயானி தனபால அல்லது ஷப்னா அஜிரீன் அவர்களை தொடர்புகொள்ளலாம்.

**தொலைபேசி : +94 115063308 / +94 115063307**

**மின்னஞ்சல் : corporateservices@lolc.com**

ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்பது அல்லது பங்கேற்பது மற்றும் வாக்களிப்பதற்கு உரிமையுள்ள பங்குதாரர்கள் சார்பில் மெய்நிகர ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு மாத்திரம் அல்லது பங்கேற்பது மற்றும் வாக்களிப்பதற்கு (பொருந்துவதாயின்) பிரதிநிதி ஒருவரை நியமிக்க பங்குதாரர்களுக்கு உரிமை உள்ளது. பிரதிநிதிகளுக்கான படிவத்தை மேற்கூறிய இணையதளங்களில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

சபை ஆணைப்படி
**அக்ஸ்டார் பிஎல்சி**

**LOLC Corporate Services (Private) Limited**
**நிறுவன செயலாளர்கள்**

2022 ஒகஸ்ட் 31

# பொது அறிவிப்பு



198633004555 என்ற தேசிய அடையாள அட்டையை கொண்டுள்ள திரு. **அமில படுவிட்ட, "Prime Apparels"** மற்றும் **"Prime Apparels"** நிறுவனங்களின் பணியாளராகவோ அல்லது பிரதிநிதியாகவோ இருந்ததில்லை என்பதை பொது மக்களுக்கு தெரிவிக்கவே இது, திரு **அமில படுவிட்ட** நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒருபோதும் அதிகாரம் வழங்கவில்லை

மேற்படி நிறுவனத்தின் சார்பாக திரு. **அமில படுவிட்ட** செய்வதாகக் கூறும் எந்தவொரு பரிவர்த்தனை, பரிவர்த்தனைகள் அல்லது செயற்பாடுகள் கௌரவிக்கப்படமாட்டாது என்பதைத் தெரிவிக்கவும்.

அவருடன் கையாளும் எந்தவொரு நபரும்

அல்லது நிறுவனமும் அவரது சொந்த ஆபத்திலும் பொறுப்பிலும் செய்ய வேண்டும்.

**Prime Apparels**
**info@primeapparels.lk**

## பேலியகொட நகர சபை

# வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2023ஆம் வருடம்

2023ஆம் வருடத்தில் இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்ளும் பொருட்டு என்னால் 2022-09-01ஆம் திகதி முதல் 2022-09-30ஆம் திகதி வரையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள கட்டணத்துடன் தமது தகைமை மற்றும் சொத்துக்களை உறுதி செய்யும் ஆவணங்கள் மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடன் விண்ணப்பப் படிவத்தை 2022-09-30ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பேலியகொட நகர சபை, பேலியகொட எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். இத்துடன் தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களை முறையாகப் பூர்த்தி செய்து நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை ரொக்கப் பணமாக அல்லது காசுக் கட்டளையின் மூலம் செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு பதிவு செய்து கொண்ட வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் தேவையான வேளைகளில் வெளி வழங்குநர்களிடமிருந்து, ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை நகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

பதிவுக் கட்டணம் இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளும் இறுதித் தீர்மானத்தை பேலியகொட நகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**கே. டீ. ஆனந்த புஷ்பகுமார,**
**தலைவர்,**
**பேலியகொட நகர சபை.**

**2022-09-01**
**தொ.பே. இல. 0112911105**
**தொலைநகல்: 0112913380**

**அட்டவணை**

| பொருள் வழங்குநர் | பதிவுக் கட்டணம் |
|---|---|
| 01. மின்சார உபகரணங்கள் | ரூபா 2000.00 |
| 02. அலுவலக மரத்தளபாடங்கள் மற்றும் உருக்குஅலுமாரிகள் கபர்ட் உட்பட ஏனைய உபகரணங்கள் | ரூபா 2000.00 |
| 03 தட்டச்சுப் பொறிகள், கணித்தல் பொறிகள், ரோணியோ இயந்திரங்கள் | ரூபா 2000.00 |
| 04. காகிதாதிகள் | ரூபா 2000.00 |
| 05. டயர், டியூப் மற்றும் டயர்களை மீள நிரப்புதல் | ரூபா 2000.00 |
| 06. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | ரூபா 2000.00 |
| 07. கிருமிநாசினிகள் மற்றும் பீடை நாசினிகள் | ரூபா 2000.00 |
| 08. தீயணைப்பு உபகரணங்கள் | ரூபா 2000.00 |
| 09. துணிகள் மற்றும் சீருடைகளை வழங்குதல் | ரூபா 2000.00 |
| 10. பெயர்ப் பலகைகள், பதாகைகள், நினைவுப் படிகங்களைத் தயாரித்தல் | ரூபா 2000.00 |
| 11. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்குதல் | ரூபா 2000.00 |
| 12. துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் (தும்பு, ஈர்க்கிள், மலசலகூடத் தூரிகைகள், பிரம்புக் கூடைகள்) | ரூபா 2000.00 |
| 13. அனுமதிப்பத்திர தகடுகள் | ரூபா 2000.00 |
| 14. அச்சு வேலைகள் | ரூபா 2000.00 |
| 15. சகல விதமான கனரகப் பொருட்கள் | ரூபா 2000.00 |
| 16. கணனிகள் / கணனி துணைப்பாகங்கள் | ரூபா 2000.00 |
| 17. கொங்கிறீட் பொருட்கள் மற்றும் ஹியூம் குழாய்கள் | ரூபா 2000.00 |
| 18. வாகன பெட்டறிகள் | ரூபா 2000.00 |
| 19. நிர்மாணத்திற்கு பயன்படுத்தும் பொருட்கள் (கொலாஸ், பிரிமிக்ஸ், ரெடிமிக்ஸ்) | ரூபா 2000.00 |
| **சேவைகள்** | |
| 01. வாகனங்களை சேர்விஸ் செய்தல் | ரூபா 2000.00 |
| 02. வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களின் திருத்தவேலைகள் | ரூபா 2000.00 |
| 03. கணனி இயந்திரங்களின் பராமரிப்பு, திருத்தவேலைகள் மற்றும் நிறுவுதல்கள் | ரூபா 2000.00 |
| 04. சுகாதாரம் மற்றும் வீதிப் பிரிவு உபகரணங்களின் திருத்தவேலைகள் | ரூபா 2000.00 |
| 05. புத்தகம் கட்டுதல் மற்றும் அது சார்ந்த சேவைகள் | ரூபா 2000.00 |
| 06. அளத்தல் வேலைகளை நிறைவேற்றுவதற்கு திட்ட வரைபடங்களை வரைதல் | ரூபா 2000.00 |
| 07. சட்ட ஆலோசனைகள் மற்றும் அது சார்ந்த சேவைகளை வழங்குதல் | ரூபா 2000.00 |
| 08. ஒலிபெருக்கி இயந்திரங்கள் மற்றும் மின்னொளி வேலைகள் | ரூபா 2000.00 |
| 09. வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை வாடகைக்கு அமர்த்துதல் (ஸ்கவேட்டர்/டோஸர்/டிப்பர் வண்டிகள்) | ரூபா 2000.00 |
| 10. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (புகைப்படப்பிரதி/ ரோணியோ இயந்திரங்கள்) | ரூபா 2000.00 |
| 11. உருக்கியொட்டும் வேலைகளைச் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் | ரூபா 2000.00 |
| 12. உணவு பானங்கள் வழங்குதல் மற்றும் கேட்டரிங் சேவைகள் | ரூபா 2000.00 |
| 13. வளிச்சீராக்கி திருத்தவேலைகள் | ரூபா 2000.00 |
| **ஒப்பந்த வகுதி** | |
| 01. வீதிகள், வடிகான்கள், கட்டிடங்கள் மற்றும் விளையாட்டு திடல்களை அமைத்தல் போன்ற சிவில் பொறியியல் வேலைகளுக்கு 2,000,000.00 ரூபா வரை<br>1,000,000.00 | ரூபா 5000.00<br>ரூபா 2500.00 |
| 02. தகனச்சாலை நிர்மாணம், திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல் 2,000,000.00 ரூபா வரை | ரூபா 3000.00 |
| 03. அலுமினியம் மற்றும் பகுதி பிரிப்பு வேலைகள் மற்றும் அதன் திருத்தவேலைகள் 2,000,000.00 ரூபா வரை | ரூபா 1000.00 |
| 04. அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல் (வரையறை இல்லை) | ரூபா 500.00 |
| 05. பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் (மேசன், தச்சர்) | ரூபா 500.00 |

**பேலியகொட நகர சபை**

**2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்**

01. வழங்குநரின் பெயர் :..........................................................
02. முகவரி :..........................................................
03. தேசிய அடையாள அட்டை இல : ..........................................
04. தொலைபேசி இல....................தொலைநகல் இல. ..........................
05. வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகள் : ..............................
..........................................................................
06. பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் தொடர்பாக உள்ள அனுபவம்:
..........................................................................
07. இக்டாட் பதிவிலக்கம்/வியாபாரப் பதிவிலக்கம்: ..............................
08. பதிவுக் கட்டணம் :..........................................................
09. தொகை ரூபா :.................... திகதி:..............................
10. காசுக் கட்டளை இலக்கம்: ..........................................

மேற்படி தகவல்கள் சரியானவையெனவும், பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன என இத்தால் சான்றளிக்கின்றேன்.

திகதி:............................... கையொப்பம்: ..........................................

## அற்றோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு மற்றும் அனைத்துப் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுவதாவது.

இலக்கம் 74/6, ரம்முத்துகல, கடவத்தை என்ற முகவரியில் வசிக்கும் குணரத்ன அதிகாரம்கே ரொஹான் பிரசன்ன தனபால (தே.அ.அ. இலக்கம் 660710329V) ஆகிய நான்.

இலக்கம் 297/1, கெமுனு மாவத்தை, கிரிபத்கொட களனி என்ற முகவரியில் வசிக்கும் உக்கல்ல ஆரச்சிகே ரத்னசிரி (தே.அ.அ. இல. 472402510V) என்பவருக்கு வழங்கப்பட்டதும் பிரசித்த நொத்தாரிசு திரு. ஜே.ஏ. சரத் குமாரசிங்ஹ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான 180 இலக்கம் 2005 ஜூன் 25ஆம் திகதி இடப்பட்டதுமான அற்றோர்ணி இரத்துவமானது இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றது. இன்று முதல் செயல்வலுப்பெறும் வகையில் களனி, கிரிபத்கொட, கெமுனு மாவத்தை, இலக்கம் 297/1, என்ற முகவரியில் வசிக்கும் உக்கல்ல ஆரச்சிகே ரத்னசிரி என்பவரினால் என் சார்பில் மேற்கொள்ளப்படும் எந்தவிதமான நடவடிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் தொடர்பாக நான் பொறுப்புதாரியல்ல எனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**குணரத்ன அதிகாரம்கே ரொஹான் பிரசன்ன தனபால**

Repeat Your Ad For Better Offers

# பகிரங்க ஏல விற்பனை

## மாவட்ட நீதிமன்றம் கொழும்பு

வழக்கு இலக்கம் : 29/13/DPA

ஷான் ஜெரம் சேவியர்
இல: 165/3, ஹைலெவல் வீதி,
நுகேகொடை

**வழக்காளி -**

- எதிர் -

01. டாக்டர் துஷாந்தி விஜேந்திர, (தி/மு பீரிஸ்) இல: 60, வெஸ்ட்வுட் பார்க் ரோட், பீட்டர்பரோ – PE36JL ஐக்கிய இராச்சியம்
02. சுபாஷினி ரதனிக்கா பத்தே வித்தான, (தி/மு பீரிஸ்) இல: 629, லோங் பிரிஜ் ரோட், பார்க்கிங், எசேக்ஸ், IG-119 BZ ஐக்கிய இராச்சியம்
03. விஜேந்திர ரசிக்க பீரிஸ், இல: 9, பீட் குரொப்ட், பாரில்ப் செல்பீ, வடக்கு யோக்ஷயர், YO-85 UY ஐக்கிய இராச்சியம்
04. சஜீவ டேமியன் ஜெரம் சேவியர், (இளம் பராயத்தினன்) இல: 165/3, ஹைலெவல் வீதி, நுகேகொடை

**எதிராளிகள்**

05. சாந்த ஜோன் நவரட்ணம் சேவியர், இல: 165/3, ஹைலெவல் வீதி, நுகேகொடை

**4வது எதிராளியின் காப்பாளர்**

மேற்படி இலக்கமுடைய பிரிவிடல் வழக்கின் உரிய காணி மற்றும் வளவு வழக்குத் தீர்ப்பில் குறிப்பிட்டதன் பிரகாரம், வழக்கில் குறிப்பிடப்படும் காணித்துண்டுகள் வழக்காளிக்கும் 01 தொடக்கம் 04 வரையிலான எதிராளிகளுக்கு உரிமையளிக்கப்படல் வேண்டும் எனவும், அவர்கள் அதன் மூலம் உரித்தை பெறுகிறார்கள் எனவும், அவ்வழக்கில் பதிவு செய்யப்பட்டதும் 2016 ஒக்டோபர் மாதம் 20ம் திகதியிடப்பட்ட வழக்கு தீர்வையின் பிரகாரம் கட்டளைப் பிறப்பிக்கப்பட்டிருப்பதாலும், அந்த உரிய வழக்குத் தீர்வையில் மிகச் சரியாகவும், முழுமையாகவும் விபரிக்கப்பட்டிருக்கும் உரிய காணி மற்றும் வளவு பிரிவிடல் வழக்கின் ஏற்பாடுகளுக்கு அமைவாக விற்பனை செய்யப்பட்டு விற்பனை மூலம் கிடைக்கப் பெறும் பணத்தொகை இந்த வழக்கின் பற்றில் வரவு வைக்கப்படுவதன் மூலம் நீதிமன்றத்தின் பொறுப்பில் வைப்பிலிடப்படல் வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதனாலும், இங்கு கீழ் அட்டவணையில் விபரமாக குறிப்பிடப்பட்டிருக்கும் காணி மற்றும் வளவு நீதிமன்றத்தின் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டு அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக

**2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ந் திகதி மு.ப 11.00 மணிக்கு**

உரிய ஆதனம் அமைந்திருக்கும் இடத்தில் பகிரங்க ஏல விற்பனையின் மூலம் விற்கப்படும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**ஆதனத்தை சென்றடையும் வழி:**
ஆதனம் அமைந்திருக்கும் இடம்: - கொழும்பு - காலி வீதி, பம்பலப்பிட்டிய சர்பரி காடன் கிளை வீதியின் ஊடாக (கடல் பக்கமாக) கிட்டத்தட்ட 50 மீட்டர் சென்ற பிறகு பாதையின் இடது பக்கம் வரி மதிப்பீட்டு இலக்கம்: 25/1 ல் இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**மேற்குறிப்பிடப்பட்ட ஆதன அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பல்லே பத்துவ, கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள், ஹேவ்லொக் நகர, வட்டார இலக்கம்: 38ல் பம்பலப்பிட்டிய சர்பரி காடனஸ் என்ற இடத்தில் அமைந்துள்ள "அப்புஹாமிகே வத்த" என அழைக்கப்படும் அங்கீகாரம் பெற்ற நில அளவையாளர் எம்.டி.சமீர் என்பவரினால் 1976 ஏப்ரல் 16ல் நில அளவைப் படத்தில் எக்ஸ் 03 என காட்டப்பட்டிருப்பதும், வரி மதிப்பீட்டு இலக்கம்: 25/41 ஆதனமானது மீள் அளவை செய்யப்பட்டு அங்கீகாரம் பெற்ற நில அளவையாளர் எஸ்.எச்.பேர்னாட் ஜோசப் என்பவரினால் 2015.05.26ந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட நில அளவைப்பட இலக்கம்: 31/2015ன் பிரகாரம் காணியின் எல்லைகளாவன: வடக்கு : வரி மதிப்பீட்டு இலக்கம்: 25/2, சர்பட் காடன்ஸ் மற்றும் வீதி, கிழக்கு: வரி மதிப்பீட்டு இலக்கம்: 23/2, சர்பட் காடன்ஸ், தெற்கு : வரி மதிப்பீட்டு இலக்கம்: 26 மற்றும் 28 சர்பட் காடன்ஸ், மேற்கு: வரி மதிப்பீட்டு இலக்கம்: 33 மற்றும் 35 சர்பட் காடன்ஸ் என்ற எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனத்தின் பரப்பளவானது: பத்து தசம் ஏழு பேர்ச்சஸ் (ஏ0- ரூ0- பே10.7) அல்லது 0.02706 ஹெக்டயார் ஆகும். அதில் அடங்கியுள்ள கட்டிடம் மற்றும் ஏனைய யாவும் ஆகும்.

மேற்படி 16/76 இலக்க காணி நில வரைபடத்தில் எக்ஸ்-04 எனக் காட்டப்பட்ட காணிக்குள் நுழைவதற்கான பாதையை உபயோகிப்பதற்கான உரிமையுடன் ஆகும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை:**
ஏல விற்பனை முடிவடைந்தவுடன் கொள்வனவாளர் கீழ் குறிப்பிடப்படும் கொடுப்பனவை ஏல விற்பனையாளரிடம் பணமாகச் செலுத்துதல் வேண்டும் (காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

1. ஏல விற்பனையில் ஆதனத்தை வாங்குபவர் விற்பனை விலையில் 25% யை காணியை ஏலத்தில் காசு கொடுத்து வாங்கியவுடனேயே செலுத்துதல் வேண்டும் என்பதோடு, மிகுதி 75% காசை ஏல விற்பனை தினத்திலிருந்து 30 நாட்களுக்குக்கிடையில் கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கில் பற்றாக வைப்பிலிடுதல் வேண்டும்.
2. ஏலதாரரின் உத்தியோகபூர்வ சேவைக் கட்டணம் விற்பனை விலையின் 2.5%
3. பிரதேச சபைக்குரிய கட்டணம் ஏல விற்பனை தொகையின் 1% செலுத்துதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் 29/13 இலக்க பிரிவிடல் வழக்கின் வழக்குக் கோவையை பார்வையிடலாம்.

**நீதிமன்ற கட்டளையின் படி**
ஜே.டபிள்யூ.யூ.ஜயவர்தன
நீதிமன்ற ஆணையாளர்
பெறுமதி மதிப்பீட்டாளர்,
அங்கீகாரம் பெற்ற ஏல
விற்பனையாளர் அகில
இலங்கை சமாதான நீதவான்
தொ .பே இல: 091-2277105,
077-9663420 071-3358434

2022.08.15

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB/NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/100<br>வாடகைக்கு மோட்டார் கார் - பிரதேச பிரதம மின் பொறியியலாளர் -அம்பாறை<br>(இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/101<br>வாடகைக்கு வான் - மின் அத்தியட்சகர் (அக்கரைப்பற்று மின் பாவனையாளர் சேவை நிலையம்) அம்பாறை<br>(இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/102<br>வாடகைக்கு வான் / டபிள்கப் - மின் அத்தியட்சகர் (கிங்குராண மின் பாவனையாளர் சேவைநிலையம்) அம்பாறை | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/103<br>வாடகைக்கு வான் -<br>மின் அத்தியட்சகர் (இங்கினியாகலை மின் பாவனையாளர் சேவை நிலையம்)- அம்பாறை<br>(இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/104<br>வாடகைக்கு வான் / டபிள்கப் - மின் அத்தியட்சகர் (காத்தான்குடி மின் பாவனையாளர் சேவை நிலையம்) மட்டக்களப்பு<br>(இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,மட்டக்களப்பு<br>065-2222639<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666.'. 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/105<br>வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (திட்டமிடல்) - பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/106<br>வாடகைக்கு 4WD டபிள் கப்<br>மின் அத்தியட்சகர் (விநியோக பராமரிப்பு பிரிவு) - திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/107<br>வாடகைக்கு வான்<br>தகவல் தொழில்நுட்ப அதிகாரி (கிழக்கு) - திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/108<br>வாடகைக்கு கார் (பிரதேச பிரதம மின் பொறியியலாளர்)- மட்டக்களப்பு<br>(இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,மட்டக்களப்பு<br>065-2222639<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666.'. 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/109<br>வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (களுவாஞ்சிக்குடி பாவனையாளர் சேவை நிலையம்) மட்டக்களப்பு | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,மட்டக்களப்பு<br>065-2222639<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666.'. 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/110<br>வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (மூதூர் பாவனையாளர் சேவை நிலையம்) திருகோணமலை | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேசமின் பொறியியலாளர் அலுவலகம், (திருகோணமலை)<br>026-2222301<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/111<br>வாடகைக்கு கட்டிடம் (சேருநுவர மின் பாவனையாளர் சேவை நிலையம்)- திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேசமின் பொறியியலாளர் அலுவலகம், (திருகோணமலை)<br>026-2222301<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/112<br>வாடகைக்கு கட்டிடம் (கோமரன்கடவல மின் பாவனையாளர் சேவைநிலையம்)- திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேசமின் பொறியியலாளர் அலுவலகம், (திருகோணமலை)<br>026-2222301<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/113<br>வாடகைக்கு கட்டிடம் (புல்மோட்டை உப மின் பாவனையாளர் சேவை நிலையம்)- திருகோணமலை<br>(இரண்டுவருடகாலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேசமின் பொறியியலாளர் அலுவலகம், (திருகோணமலை)<br>026-2222301<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/114<br>வாடகைக்கு கட்டிடம் (நிலாவெளி மின் பாவனையாளர் சேவை நிலையம்)- திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 14-09-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேசமின் பொறியியலாளர் அலுவலகம், (திருகோணமலை)<br>026-2222301<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 500.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத்திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்தி வரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# ஆப்கானின் வெற்றியால் இலங்கை அணியின் எதிர்பார்ப்பு அதிகரிப்பு

பங்களாதேஷுக்கு எதிரான ஆசியக் கிண்ண குழுநிலைப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியதன் மூலம் இந்தத் தொடரில் இலங்கை அணி 'சுப்பர் போர்' சுற்றுக்கு முன்னேற தெளிவான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (30) நடந்த போட்டியில் ஆப்கான் வெற்றி பெற்றதன் மூலம் அந்த அணி தொடரில் முதல் அணியாக சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறியது. ஆப்கான் தனது முதல் போட்டியில் இலங்கை அணியை வீழ்த்தியது.

இந்நிலையில் ஆப்கானிடம் இலங்கை மோசமான தோல்வியை சந்தித்ததால் நிகர ஓட்ட விகிதத்தில் பெரும் சரிவை பதிவு செய்து அடுத்த சுற்றுக்கு முன்னேறுவது கேள்விக் குறியான நிலையிலேயே இருந்தது. எனினும் பங்களாதேஷ் ஆப்கானிடம் தோற்றதால் இலங்கைக்கு எந்த நிபந்தனையும் இன்றி தனது கடைசி குழு நிலைப் போட்டியில் பங்களாதேஷை வீழ்த்தினால் போதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இன்று (01) டுபாயில் நடைபெறும் இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான போட்டி 'நொக் அவுட்' ஆட்டம் ஒன்றாக மாறியுள்ளது. இந்த இரு அணிகளும் ஆப்கானிடம் தோற்றிருக்கு நிலையில் தனது பலவீனங்களை சரி செய்து இன்றைய போட்டியில் களமிறங்க எதிர்பார்த்துள்ளன.



## அடுத்த சுற்றுக்காக இலங்கை எதிர் பங்களாதேஷ் இன்று பலப்பரீட்சை

ஆப்கானுடனான போட்டியில் இலங்கை அணி அனைத்துத் துறைகளிலும் சோமிக்கத் தவறிய சுழலில் இலங்கை அணியில் சில மாற்றங்கள் செய்ய வாய்ப்பு உள்ளது. குறிப்பாக அனுபவமில்லாத வேகப் பந்துவீச்சாளர்கள் மற்றும் துடுப்பாட்ட வரிசையிலும் மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

எவ்வாறாயினும் ஆப்கான் அணி இந்தத் தொடரில் ஒரு வலுவான அணியாக உருவெடுத்துள்ளது. இலங்கையுடனான போட்டியை போன்றே பங்களாதேஷுக்கு எதிரான போட்டியிலும் அந்த அணி ஆரம்பத்திலேயே விக்கெட்டுகளை சாய்த்து நெருக்கடி கொடுத்தது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ஆரம்பம் தொட்டு முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் ஓட்ட வேகத்தை அதிகரிக்க முடியாமல் போனது. குறிப்பாக ஆப்கான் சுழற்பந்து வீச்சாளர்களான முஜீபுர் ரஹ்மான் மற்றும் ரஷீத் கான் தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தியது ஆப்கானுக்கு வலுச் சேர்த்தது.

இதனால் பங்களாதேஷ் அணி 20 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 127 ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய ஆப்கான் அணி ஆரம்பத்தில் விக்கெட்டை காத்துக் கொண்டு மந்தமாக ஆடி கடைசி ஓவர்களில் தனது அதிரடி ஆடத்திற்கு திரும்பியது.

குறிப்பாக இப்ராஹிம் சத்ரான் மற்றும் நஜீபுல்லா சத்ரான் இருவரும் பங்களாதேஷ் அணியை துவம்சம் செய்தனர். இப்ராஹிம் ஆட்டமிழக்காது 41 பந்துகளில் 42 ஓட்டங்களை பெறும்போது மறுமுனையில் நஜீபுல்லா ஆட்டமிழக்காது 17 பந்துகளில் 1 பௌண்டரி மற்றும் 6 சிக்ஸருடன் 43 ஓட்டங்களை விளாசினார்.

SINCE 1978
44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ....................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ....................
வாக்களித்தவர் பெயர் : ....................
முகவரி : ....................
மொபைல் இல. : ....................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 03-09-2022 இல. 23




## தென்கிழக்கு பல்கலையின் இருவர் கராத்தே சம்பியன்

*மாளிகைக்காடு குறூப் நிருபர்*

சோட்டோகான் தேசிய கராத்தே சம்பியன்ஷிப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பழைய மாணவர்கள் இருவர் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

இந்தப் போட்டி அண்மையில் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இதில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் சார்பில் பங்கேற்ற என்.எம். உமைர் பிரிவு 3 காதா மற்றும் குமிதே போட்டிகளிலும், ஏ.கே.எம். ஹஸ்னத் கான் கறுப்புப் பட்டி காத்தா போட்டியிலும் தங்கப் பதக்கங்களை வென்றனர்.



## சர்வதேச செய்திகள்

### பனிப்போரை முடிவுக்குக் கொண்டுவந்த கடைசி சோவியத் தலைவர்

# கொர்பச்சேவ் காலமானார்

பனிப்போரை அமைதியான முறையில் முடிவுக்குக் கொண்டுவந்த சோவியத் ஒன்றியத்தின் கடைசித் தலைவர் மிகைல் கொர்பச்சேவ் தனது 91ஆவது வயதில் காலமானார்.

1985 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கொர்பச்சேவ் சோவியத் ஒன்றியத்தை உலகுக்கு திறந்துவிட்டதோடு உள்நாட்டில் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

எனினும் நவீன ரஷ்யா உருவெடுப்பதற்கு காரணமான, சோவியத்தின் மெதுவான வீழ்ச்சியை அவரால் தடுக்க முடியாமல்போனது.

அவரது மரணத்திற்கு உலகெங்கும் இருந்து அனுதாபங்கள் வெளியிடப்பட்டு வருவிதோடு "வரலாற்றின் போக்கை மாற்றியவர்" என்று ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் அவர் பற்றி வர்ணித்துள்ளார்.

"மிகைல் கொர்பச்சேவ் இரக்கம் மிகுந்த அரசியல் தலைவர். அமைதிக்காக சோர்வின்றி பாடுபட்ட, பலமுனை உறவுகளுக்கு ஆதரவான, மிக உயர்ந்த தலைவர் ஒருவரை உலகம் இழந்துவிட்டது" என்று அவர் தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.



கொர்பச்சேவ் மறைவுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

கொர்பச்சேவ் நீண்ட காலமாக தீவிர நோய் பாதிப்புக்கு உள்ளாகி இருந்ததாக அவர் மரணித்த மொஸ்கொ மருத்துவமனை தெரிவித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே அவரது உடல் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. மருத்துவமனையில் சேருவதும், வீட்டுக்குத் திரும்புவதுமாக அவர் இருந்தார். சிறுநீரக கோளாறு ஒன்றுக்காக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக கடந்த ஜுன் மாதம் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால், அவரது மறைவுக்கான காரணம் தற்போது விவரிக்கப்படவில்லை.

"மிக அரிதான தலைவர்" என்று அவரை வர்ணித்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பனிப்போர் பதற்றத்திற்கு மத்தியில் வேறுபட்ட எதிர்காலம் ஒன்றை கற்பனை செய்ய காரணமானவராக அவர் இருந்தார்" என்றார்.

கொர்பச்சேவின் துணிச்சலையும், நம்பகத் தன்மையையும் எப்போதும் வியந்து வந்ததாகவும், சோவியத் சமூகத்தை அவர் திறந்துவிட்டது, புடினின் ஆக்கிரமிப்புக் காலத்தில் எடுத்துக்காட்டாக உள்ளது என்றும் பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

1985ஆம் ஆண்டு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும், அதன் வழியாக நாட்டின் தலைவராகவும் ஆனவர் கொர்பச்சேவ்.

அவர் அமெரிக்காவுடன் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்களைச் செய்து பனிப்போர் பதற்றத்தை தணித்தார். மேற்கத்திய நாடுகளுடன் கூட்டு முயற்சியில் ஈடுபட்டு ஐரோப்பா பிளவுபட்டிருக்கக் காரணமாக இருந்த இரும்புத் திரையை நீக்கினார். ஜெர்மனி மீண்டும் ஒன்றிணையவும் வழிவகுத்தார். 1990ஆம் ஆண்டு அவர் அமைதிக்கான நோபல் பரிசை வென்றார்.

## மின் வாகனத்தால் அமைதியான புரட்சி

மின்சார வாகனங்கள் நாட்டில் அமைதியான புரட்சியை கொண்டுவருவதாகவும் இந்தியா கார்பன் உமிழ்வை குறைக்க உதவும் என்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



குஜராத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சுசுகி மோட்டார் கோபரேசன் நிறுவனத்தின் 40 ஆண்டு நிறைவு வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவத்தார். மரூட்டி–சுசுகியின் வெற்றி இந்திய–ஜப்பானின் வலுவான நட்புறவை குறிப்பதாக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மஹதிர் மொஹமட் மருத்துவமனையில்

கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து மலேசிய முன்னாள் பிரதமர் மஹதிர் மொஹமட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைரஸ் இருப்பது புதன்கிழமை காலை உறுதி செய்யப்பட்டதாகவும் மருத்துவக் குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய கண்காணிப்புக்காக அடுத்த சில நாட்களுக்கு தேசிய இதய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அவரது அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



97 வயதான மஹதிர் மொஹமட் இதயப் பிரச்சினைகளால் நீண்ட காலமாக பாதிக்கப்பட்டுள்ளார் என்பதோடு கடந்த ஜனவரியில் கணிசமான காலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.